# சர்வவியாபி

SARVAVIABI

MISSION PRESS 1840

| 08-10-2017 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | ஹேவிளம்பி வருடம் புரட்டாசி 22 | வருட சந்தா ₹ 150<br>தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 111<br>பக்கம் - 12 | இதழ் 39 | e-mail:missionpress48@gmail.com<br>e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/<br>2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச் |
|---|---|---|---|---|


## இலத்தீன் அமெரிக்க ஆயர்களுக்கு திருத்தந்தையின் உரை

***(செப்டம்பர் 6 முதல் 11 வரை திருத்தந்தை பிரான்சிஸ் கொலம்பியா நாட்டில் திருத்தூது சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.)***



(செப்.8) அன்பு சகோதரர்களே, இலத்தீன் அமெரிக்க கத்தோலிக்க உணர்வை ஆழப் படுத்த, இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் பேரவையான CELAM முயற்சிகள் செய்து வருவதைப் பாராட்டு கிறேன். நான்கு ஆண்டுகளுக்கு முன், ரியோ நகரில் உங்களைச் சந்தித்தபோது, Aparecida வில் நிகழ்ந்த மாமன்றம் தந்த வழிமுறைகள் குறித்து உங்களிடம் பேசினேன். நற்செய்தியை ஒரு கொள்கை திரட்டாக, செயல் முறைத் திட்டமாக மட்டும் காணும் ஆபத்தைப் பற்றி குறிப்பிட்டேன்.

நற்செய்தி என்பது, திருஅவையை முன்னேற்றும் வழிமுறை களைச் சொல்லித்தரும் திட்ட எடு அல்ல. இவ்வுலகை வழிநடத்த, மேலாண்மை நிறுவனங்கள் சொல்லித்தரும வழிமுறைகள்போல, திருஅவையை வழிநடத்தும் முறை களைச் சொல்லிதரும் பாடநூலாக நற்செய்தி அமைந்து விடக்கூடாது. நற்செய்தி நம்மை, சொந்த நலன்களிலிருந்து ஆண்டவரை நோக்கி அடுத்தவரை நோக்கி அழைத்துச் செல்லும் செயலாக மாறவேண்டும். பதட்டமும், குழப்பங்களும் நிறைந்த இவ்வுலகில் மறைபணியாற்ற செல்லும் சீடர்களாக வாழ, இறைவன் நம்மை அழைத்துள்ளார்.

அருகாமையும், சந்திப்பும் ஆண்டவர் பயன்படுத்தும் வழி முறைகள். எனவே, ஆயர்,ஆண்டவருக்கும், அவரது மக்களுக் கும் அருகில் இருப்பது முக்கியம்.தங்கள் பணிகளிலிருந்து உற்சாகத்துடன் திரும்பிவந்த சீடர்களிடம், “நீங்கள் பாலை நிலத்திலுள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று சற்று ஓய்வெடுங்கள்” (மாற்கு 6:31) என்று இயேசு கூறினார். ஆயர் களின் பல்வேறு பணிகளுக்கிடையே, மனதை ஒருநிலைப்படுத்தும் வண்ணம் தனிமையில் இருப்பது மிக முக்கியம்.

இலத்தீன் அமெரிக்கத் திருஅவை, ஒருங்கிணைப்பின் அருளடையாளமாக இருக்கவேண்டும். தென் அமெரிக்க கண்டத்தில் காணப்படும் பன்முகக் கலாச்சாரச் செறிவை, முழுமனதுடன் ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். இலத்தீன் அமெரிக்க திருஅவை, நம்பிக்கையின் அருளடையாளமாக இருக்கவேண்டும். இலத்தீன் அமெரிக்காவில், இந்த நம்பிக்கை, இளமை நிறைந்த முகம் கொண்டுள்ளது. இளையோர், இக்கண்டத்தின் நம்பிக்கை. அவர்களைப் பற்றியமுற்சார்பு எண்ணங்களை விலக்கிவிட்டு, அவர்கள் கண்களில் தெரியும் நம்பிக்கையை போற்றி வளர்க்க வேண்டும்.

இலத்தீன் அமெரிக்காவில், இந்த நம்பிக்கை, பெண்மை நிறைந்த முகம் கொண்டுள்ளது. பெண்கள் இல்லையெனில், இலத்தீன் அமெரிக்கத் திருஅவை, மீண்டும், மீண்டும் பிறக்கக் கூடிய சக்தியை இழந்துவிடும். கோவில்களில் எளியப் பணி களைச் செய்வோராக மட்டும் பெண்களைக் கருதாமல், திருஅவையின் மறைப்பணியாளர்களாக அவர்களைக் கருத வேண்டும். இலத்தீன் அமெரிக்கத் திருஅவையின் நம்பிக்கைக்கு அடித்தளம். இங்குள்ள பொதுநிலையினர். இத்திருஅவைக்குப் பணியாற்றும்போது, ஆழ்ந்த ஆர்வத்துடன், தாகத்துடன் நாம் பணியாற்றுவேண்டும். நற்செய்திப்பணியில், ஆர்வமும், தாகமும் கொள்ள உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**கொலம்பியா:** (செப்.9.2017) அமேசான் துறைமுகப் பகுதியில் வில்லா விசென்சியோ நகரில் திருத்தந்தை நிறைவேற்றிய திருப்பலியில், நான்கு லட்சத்துக்கு மேற்பட்ட விசுவாசிகள் முன்னிலையில், இறையடியவர்கள் மரிய ரமிரேஸ் ராமோஸ், ஹேசுஸ் ஹாரமில்லா மொன்சால்வே ஆகியோரை முத்திப்பேறு பெற்றவர்கள் என அறிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.





முத்திப்பேறு பெற்ற **ஹேசுஸ் ஹாரமில்லோ மொன்சால்வே** அவர்கள், 1916ம் ஆண்டு பிப்ரவரி 14ம் நாளன்று, கொலம்பியா வின் சாந்தோ தொமிங்கோவில் பிறந்தார். 1940ம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதி அருள் பணியாளராகத் திருநிலைப் படுத்தப்பட்ட இவர், 1970ம் ஆண்டு நவம்பர் 11 ம் தேதி Arauca வுக்கு அப்போஸ்தலிக்க உதவியாளராக நியமிக்கப்பட்டார். திருத்தந்தை புனித 2 ம் ஜான்பால் அவர்கள், 1984ம் ஆண்டு ஜூலை 19ம் தேதி, Arauca ஐ மறைமாவட்டமாக உயர்த்தி, அதன் முதல் ஆயராக, முத்திப்பேறு பெற்ற ஹாரமில்லோ அவர்களை நியமித்தார். கொலம்பியாவில் போதைப்பொருள் தொடர்பான மோதல்கள் மற்றும், அரசியல் மோதல்களில் 1989ம் ஆண்டு கொல்லப்பட்டார். ஆயர் ஹாரமில்லோ, இவர் கொல்லப்பட்டதை அறிவித்து அறிக்கை வெளியிட்ட கொலம்பிய ஆயர் பேரவை, சவேரியன் அருள்பணி யாளர்கள் சபையைச் சார்ந்த ஆயர் ஹாரமில்லோ அவர்கள், 18 ஆண்டுகள், உண்மையான மறைப்பணி ஆர்வத்துடன் எடுத்துக்காட்டான வாழ்வு வாழ்ந் தவர். கிறிஸ்துவின் மீதுள்ள அன்பால் இவரது வார்த்தைகள் ஒளியேற்றப்பட்டன. நற்செய்திக் கும், அமைதிக்கும், ஒப்புரவுக்கும், நல்லிணக்க வாழ்வுக்கும், மனிதரின் புனித உரிமைகளைப் பாதுகாக்கவும் எப்போதும் குரல் கொடுத்தவர் எனக் கூறியது. மறைமாவட்ட அருள்பணியாளரான முத்திப்பேறு பெற்ற ***மரிய ரமிரெஸ் ராமோஸ்*** அவர்கள், 1899 ம் ஆண்டு அக்டோபர் 23ம் தேதி La Plataவில் பிறந்தார். பங்குத்தளத்தில் முக்கிய பணிகளை ஆற்றிய இவர், பங்குத் தளப்பணிகளை விட்டுவிடாமல், ஆசிரியப் பணியைத் தொடர்ந்து ஆற்றினார். 1931 ஆண்டு ஜூன் மாதத்தில் அருள்பணியாளரானார். நான்கு பங்குகளில் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய இவர், ஹசஅநசடி என்ற பங்குத் தளத்தில் பணியாற்றியபோது, 1946ம் ஆண்டு மறைசாட்சியாகக் கொல்லப்பட்டார்.

ஆசிரியர் பேனா...

# அவரவர் பாதுகாப்பை தேடிக்கொள்வது அவசியம்.

**பெ**ருநகரங்களில் அலுவல் நேர நெரிசல்களை தவிர்க்க முடியாது; எனினும் மக்கள் பாதுகாப்பாக பயணிக்க வேண்டும் என்பதை வலியுறுத்து கிறது கடந்த 29.9.2017 வெள்ளி அன்று மும்பை நகர் எல்ஃபின்ஸ்டன் சாலை அருகில் அமைந்துள்ள தொடர்வண்டி சந்திப்பு நிலைய நடைமேம்பாலத்தில் நிகழ்ந்த நெரிசல் விபத்து நிகழ்வு. இச்சந்திப்பில் ஒரே நேரத்தில் நான்கு தொடர் வண்டிகள் வந்துவிட்டதால், வண்டியிலிருந்து இறங்கி செல்பவர்கள் மற்றும் வண்டியில் ஏறச் செல்பவர்கள் கூட்டம் அலைமோதியது. அன்று விடுமுறை நாளானதால் கூட்டம் வழக்கத்துக்கும் அதிகமாக இருந்தது. அன்று காலை 10.30 மணி அளவில் மழை கொட்டிக் கொண்டிருந்ததால் மக்கள் இங்கும் அங்கும் அலைமோதியவாறு நெரித்துக் கொண்டு சென்றனர். அப்போதுதான் அந்த எதிர்பாராத கோர சம்பவம் நிகழ்ந்தது. யாரோ ஒருவர் மின் கசிவு ஏற்பட்டுவிட்டது என்ற புரளியை கிளப்பிவிட, மக்கள் பீதியில் முண்டியடித்துக் கொண்டு, ஒரு நடைமேடையிலிருந்து மற்றொரு நடை மேடைக்குச் செல்ல ஒரே நேரத்தில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாலத்தில் ஏறிச் சென்றதால், நெரிசல் ஏற்பட்டு, ஒருவர் மேல் ஒருவர் ஏறிச் செல்லமுயன்றனர். அப்போது அடியில் சிக்கியவர்கள், பக்கவாட்டு "கிரிலில்" மோதியவர்கள் என்று 22 பேர் உயிரிழந்தனர், 29 பேர் படுகாயமுற்றனர்.

போர்க்களமாகிப்போன எல்ஃபின்ஸ்டன் நடை மேம்பாலத்திற்கு ரயில்வே அதிகாரிகள், காவல்துறையினர், பேரிடர் மீட்பு குழுவினர் இப்படி பல மீட்புப் பணியினர் வந்து குவிந்தனர், எனினும் உயிரிழப்புகளை தவிர்க்க இயலவில்லை. மும்பையில் நெரிசல் சகஜம் என்றாலும், எல்ஃபின்ஸ்டன் மேம்பால நெரிசல் விபத்து சம்பவம் அனைவரையும் உலுக்கிவிட்டது.

ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட இந்த பாலம் சரி செய்யப்பட பல முறை தன்னார்வலர்கள் முறைப்படி முறையிட்டும், எந்த நடவடிக்கையும் எடுக்காத பெருநகர நிர்வாகம் இன்று செய்வதறியாது திகைக்கிறது. மக்கள் கேள்விக் கணைகள் தொடுக்கின்றனர்.

- ***இந்த பாலம்*** எந்த அளவுக்கு பராமரிக்கப்பட்டு வந்தது? ஏன் அதை சீர்செய்ய அல்லது மாற்று வழிகளைக் கண்டறிய அதிகாரிகள் முயற்சிக்கவில்லை? அதிகார வர்க்கத்தின் அலட்சியத்தால் 22 உயிர்கள் பலியாகக் காரண மாயிருப்பதை ஊடகங்களில் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

- ***கூட்ட நெரிசலில்*** சில விஷமிகள் வேண்டுமென்றே புரளி கிளப்பி மற்றவர்கள் அலைமோதி அவதியுறுவதை வக்ர புத்தியுடன் களிப்பது கொடூரமானது.

- ***இச்சம்பவம் குறித்த சில*** வீடியோ காட்சிகள் இணையதளத்தில் வலம் வந்த வண்ணம் உள்ளது. மிதிபட்டு தரையில் விழுந்து நசுங்கி உயிர் பிரியும் வேளையில் பெண் ஒருவர் தண்ணீர் தண்ணீர் என்று தவித்த வேளையில் ஒரு வெறி பிடித்த மிருகம் இரக்கம் இன்றி அவரை மானபங்கப் படுத்த முயற்சிக்கும் காட்சி நம்மை தலைகுனிய வைக்கிறது.

- ***பா.ஜ.க. ஆளும் மாநிலத்தின் தலை நகரில்*** நடந்த இந்த சம்பவம் குறித்து, இவர்கள் என்ன பதில் கூறப்போகிறார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது. கூட்ட நெரிசல் அதிகமாகும்போது, அதனை கட்டுப்படுத்தவும், விபத்துகள் ஏற்படாமல் தடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றவும், சட்டம் ஒழுங்கு பாதுகாக்கவும், மாற்று வழிகளை கையாளவும் வேண்டிய ரயில்வே போலீசும், காவல்துறையும் அங்கு என்னதான் செய்தார்கள் என்று தெரியவில்லை.

- ***மும்பை மாநகரில்*** ஒரு தன்னார்வ குழுவின் புள்ளி விவரப்படி ஒரு நாளுக்கு குறைந்தபட்சம் பத்து நபர்கள் இரயில் விபத்தில் இறக்கிறார்கள் அல்லது இரயில்முன் பாய்ந்து தற்கொலை செய்து கொள்கிறார்கள். ரயில்வே துறை, போக்குவரத்துத்துறை, காவல்துறை, நலவழித்துறை, இன்னும் பல அரசு இயந்திரங்களிடம் இந்த புள்ளி விபரம் உள்ளதா? இரயில் விபத்துகள் மற்றும் இரயில் முன் தற்கொலைகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ***எதற்கெடுத்தாலும் அரசை குறை கூறுகிறார்கள்*** என்று சிலர் எண்ணக்கூடும். 2017ல், ஏப்ரல் வரை நம் நாட்டில் சுமார் எட்டு பெரும் இரயில் விபத்துகள் நிகழ்ந்துள்ளன, நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். கடந்த ஆறு ஆண்டு களில் 803 இரயில் விபத்துகள் நிகழ்ந்துள்ளன, 620 பேர் இறந்துள்ளனர், 1855 பேர் படுகாயமுற்றனர். 47% இரயில் விபத்து கள் தடம் புரள்வதால் நிகழ்ந்துள்ளன.

- ***கடந்த ஆண்டுவரை பொது பட்ஜெட் என்றும்*** இரயில்வே பட்ஜெட் என்றும் தனித்தனியாக இருந்தது. இப்போது ஒரே பட்ஜெட்டாக நிதியமைச்சரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இதுவரை ப்ளாட்ஃபார்ம் டிக்கெட் 10 ரூ. என்றிருந்தது இப்போது 20 ரூபாய் கட்டணமாகியுள்ளது.

- ***இரயில்வே மேம்பாடு,*** உள்கட்டமைப்புகளில் கவனம் செலுத்த வேண்டிய சூழலில், புல்லட் இரயில் தொடங்க அண்மையில் அகமதாபாத்தில் தொடக்க விழா நடந்தது. எல்ஃபின்ஸ்டன் பால நெரிசல் உயிரிழப்பு சம்பவத்துக்குப்பின் இரயில்வேயை மேம்படுத்தாமல், மும்பயில் புல்லட் ட்ரெயினுக்காக ஒரே ஒரு செங்கல் வைப்பதற்கு அனுமதிக்க மாட்டோம் என சிவசேனா தலைவர் ராஜ் தாக்கரே கூறியுள்ளார். ஒரு லட்சம் கோடி ரூபாயில் 50 ஆண்டுக்கு கடனாக ஜப்பான் உதவியுடன் அமைக்க இருக்கும் அகமதாபாத்-மும்பை புல்லட் ட்ரெயின் திட்டம் எத்தனை ஏழைகளுக்கு பயன்படும்? விமானத்திலேயே 3000 ரூபாய்க்கு இந்த தொலைவை பறக்க இயலும் என்றுள்ள போது புல்லட் ட்ரெயினில் 4000 ரூபாய் கொடுத்து யார் பயணிக்கப் போகிறார்கள்? 750 பேர் மட்டுமே பயணிக்க இயலுமான இந்த புல்லட் ட்ரெய்னில் அகமதாபாத்திலிருந்து மும்பைக்கு உள்ள 508 கி.மீ. தூரத்தை விமானத்தில்ஒரு மணி நேரத்தில் கடக்கலாம்; அதுவே புல்லட் ட்ரெயினில் மூன்று மணி நேரமாகும். பல தலைவர்கள் இது பற்றி பல கருத்துகள் சொன்னாலும், எதிர்ப்பவர்களை தேச விரோத முத்திரை குத்திவிட்டு, திட்டத்தை வரட்டு கவுரவத்துக்காக செயல்படுத்த தலைவர்கள் தயாராவார்கள் என்று ஊடகங்கள் கருத்துரைக்கின்றன.

புல்லட் இரயில் சேவையை புகுத்தி இந்தியா உலக அளவில் பெயர் வாங்கினாலும், தற்போது இருக்கின்ற இரயில்வே துறையின் உள்கட்டமைப்புகள், இரயில் பாதை முறையான பராமரிப்பு, நிலையங்கள் பராமரிப்பு, மக்களின் பயண பாதுகாப்பு போன்றவற்றை மேம்படுத்தாத வரை, எல்ஃபின்ஸ்டன் நடைமேம்பால நெரிசல் நிகழ்வுகள் போன்றவை இடம்பெறுவதை தவிர்க்க இயலாது. பொது மக்கள் அவரவர் பாதுகாப்பை தேடிக்கொள்வது அவசியம்.

---

✦ **திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி :** "புனித குழந்தை தெரேசா விழாவான அக்டோபர் 1, இஞ்ஞாயிறன்று, அப்புனிதர் போன்று, நமக்காக சிறியவராக மாறிய கடவுளின் தாழ்மையிலிருந்து கற்றுக்கொள்வோம்."

✦ "இந்த நம் காலத்தில், கிறிஸ்தவர்களும், யூதர்களும், முஸ்லிம்களும், அமைதிக்காக மிக அதிகமாகச் செபிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது."

✦ "மரணத்தை விளைவிக்கும் அணு ஆயுதங்களை ஒழிப்பதற்கு, அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தை அமல்படுத்துவதன் வழியாக, இந்த உலகை அணு ஆயுதங்களற்ற உலகமாக மாற்றுவதற்கு நம்மை அர்ப்பணிப்போம்."

வாரச் சிந்தனை

ஆண்டின் பொதுக்காலம் 28 ஆம் ஞாயிறு (15-10-2017) எசாயா.25:6-10;பிலிப்.4:12-14,19-21; மத்.22:1-13

# இறைவன் தரும் விருந்தை சுவைத்து வாழ்வு பெறுவோம்.

நன்றி : உம் வாக்கு எம் விளக்கு

ஒருமுறை ஒரு கிராமப் பள்ளியின் வெளிப்புறம் இருந்த கரும்பலகையின்மீது "*வாழ்வு என்பது என்ன?*" என்று விளையாட்டுத்தனமாக ஒருவர் எழுதி வைத்துவிட்டுப் போனார். அப்போது அந்த வழியே ஒரு பெரியவர் வந்தார். அவர் வாழ்க்கையில் ஏராளமான துன்பங்களை அனுபவித்தவர். அவர் அந்த கேள்விக்குக் கீழே, "துன்பங்களோடும் துயரங்களோடும் போராடும் ஒரு போர்க்களம்" என்று எழுதிவிட்டுப் போய்விட்டார். அடுத்து வந்த ஒரு நடுத்தர வயதுக்காரர், "ஒரு சராசரி மனிதன்மீது தாங்கமுடியாத சுமைகளை சுமத்தி இறைவன் ரசிக்கும் விளையாட்டு" என்று எழுதினார். அடுத்து வந்த குடும்பத் தலைவி, "அழுகையும் சிரிப்பும் மாறிமாறி வரும் ஒரு மெகாத் தொடர்" என்று எழுதினார். அடுத்து வந்த வேலை தேடிக் கொண்டிருந்த இளைஞன், "நின்று நிதானித்து செயல்பட நேரமில்லாமல் பரபரப்பாக இயங்கும் மின்சார ரயில்" என்று எழுதினான். இறுதியாக வந்த ஒரு பள்ளிச் சிறுவன், "வாழ்வு என்பது என் அறிவை சோதிக்க இறைவன் நாள்தோறும் வைக்கும் தேர்வு" என்று எழுதினான்.

மேற்கண்ட பல்வேறு பதில்கள் பெரும்பாலான மனிதர்கள் வாழ்க்கையை அணுகும் விதத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. எல்லாப் பதில்களின் பின்னணியில் துன்பமும் துயரமும் இழையோடுவதை மறுக்க முடியாது. இன்றைய மனிதன் வாழ்வை மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் கழிப்பதற்குப் பதிலாக அதனோடு போராடி, காயப்பட்டுக் கொண்டிருக்கிறான். வாழ்வுக் கடலில் நிறைவோடும் நிம்மதியோடும் நீச்சலடிப்பதற்குப் பதிலாக துன்ப அலைகளைக் கண்டு அலறித் துடித்துக் கொண்டிருக்கிறான்.

***இவ்வாறு நிறைவின்றி, நிம்மதியின்றி***, மகிழ்ச்சியின்றி வாழும் மனித குலத்திற்கு மருந்தாக ஒரு மாபெரும் விருந்தை இறைவன் தருகிறார் என்ற செய்தியை முதல் வாசகமும், நற்செய்தியும் எடுத்துரைக்கின்றன. இங்கு விருந்து என்பது உடல் சார்ந்த அல்லது நாவு சார்ந்த மகிழ்ச்சியை சுட்டிக்காண்பிக்க வில்லை; மாறாக இறைவன் வழங்கும் '***முழுமையான வாழ்க்கையைச்***' சுட்டி நிற்கிறது. புதிய ஏற்பாட்டின் மாபெரும் விருந்தாகிய நற்கருணை சுட்டிக்காட்டும் உண்மையும் இதுதானே! இறைமகன் இயேசு தன்னையே நற்கருணையில் வழங்கியதன் நோக்கம் நாம் அனைவரும் வாழ்வை, அவ்வாழ்வை நிறைவாகப் பெறவேண்டும் என்பதே! எனவேதான் இறைமகன் இயேசு "எனது சதையை உண்டு இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடையமாட்டீர்கள்" என்றார் (யோவா.6:53). ஒவ்வொரு கிறித்தவரும், ஒட்டுமொத்தத் திருச்சபையும் வாழ்வு பெறுவது நற்கருணையாலே! எனவேதான் முன்னாள் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட், "நற்கருணை இல்லையேல் திருச்சபை (உயிரற்ற பொருட்கள் அடுக்கிவைக்கப் பட்டிருக்கும்) ஒரு அருங்காட்சியக மாக மாறிவிடும்" என்கிறார்.

***இப்படிப்பட்ட முழுமையான வாழ்வைத்தர*** இறைவன் தயாராக இருந்தும், நமது வாழ்வின் உடல் மன நோய்களைத் தீர்க்கும் மருந்தாக விளங்கும் மாபெரும் விருந்தைப் படைத்தாலும், அவ்வாழ்வை நாம் பெறுவதில்லையே! காரணம் என்ன என்று சிந்திக்க இன்றைய வாசகங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. இரண்டு காரணங்களை மட்டும் சிந்திப்போம்.

(அ) ***இன்றைய நற்செய்தியில்,*** திருமண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள், பல்வேறு காரணங்களைச் சொல்லி விருந்தில் பங்கேற்காததைப் பார்க்கிறோம். மத்தேயு நற்செய்தியின்படி, ஒருவர் வயலுக்கும், மற்றொருவர் கடைக்கும் செல்லப் போவதாகச் சொன்ன காரணங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. லூக்கா (14:15-24) மேலும் இரண்டு காரணங்கள் சொல்லப் பட்டதைக் குறிப்பிடுகிறார். அதாவது ஒருவர் ஐந்து ஏர்மாடுகள் வாங்கியிருப்பதாகவும் அதை ஓட்டிப் பார்க்கப்போவதாகவும், மற்றொருவர் திருமணம் பண்ணியிருப்பதால் வர இயலாது என்று கூறியதாகவும் குறிப்பிடுகிறார். இன்று மக்கள் நற்கருணை விருந்தில், அதாவது திருப்பலியில் பங்கெடுக்காமல் இருப்பதற்காக அவர்கள் சொல்லும் சாக்குப்போக்குகள் மேற்கண்ட மனிதர்கள் கூறும் காரணங்களில் ஒளிந்திருக்கின்றன. ஒரு சிலர் வயல் அல்லது கடைதான் முக்கியம் என்று தங்களது வாழ்வின் ஏழு நாட்களுமே பொருளை அல்லது பணத்தைத் தேடுவதிலேயே செலவழிக்கின்றனர். ஆறுநாட்கள் உழைத்து விட்டு, ஏழாவது நாளாவது இறைவனை மனப்பூர்வமாகத் தேடலாம் என்ற உணர்வின்றி, 'காசேதான் கடவுளடா' என்று ஓய்வின்றி உழைப்போர் பலர்.

நாய் ஒன்று தெருவில் கிடந்த கிடந்த காய்ந்த எலும்பைக் கண்டு, அதை தன்னுடைய வாயில் போட்டு சுவைக்க ஆரம்பித்தது. காய்ந்த எலும்பு நாயின் தாடையில் குத்தி இரத்தம் வரச் செய்தது. தன்னுடைய இரத்ததையே சுவைத்த அந்நாய், எலும்பிலிருந்துதான் இரத்தம் வருகிறது என்று எண்ணி, இன்னும் வேகமாக எலும்பைக் கடிக்க ஆரம்பித்தது. இன்று பலபேர் இந்நாயைப் போன்றுதான்!. பணமாகிய எலும்புத் துண்டிலிருந்து தான் வாழ்வின் மகிழ்ச்சியாகிய இரத்தம் வருகின்றது என்று அதை இன்னும் வேகமாகத் தேடுகின்றனர். ஆனால் அத்தகைய தேடலில் தங்களையே அழித்துக்கொள்வதை அவர்கள் அறிவதில்லை.

அடுத்தவர் ஐந்து ஏர்மாடுகள் வாங்கியிருப்பதாகவும், அவற்றை ஓட்டிப்பார்க்கப் போவதாகவும் கூறுகிறார். இப்பகுதிக்கு புனித பதுவை அந்தோணியார் விளக்கம் கொடுக்கும்போது, இந்த ஐந்து ஏர்மாடுகளை நம் ஐம்புலன்களுக்கு ஒப்பிடுகிறார். ஒரு சிலர் ஐம்புலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து "கண்டதே காட்சி; கொண்டதே கோலம் என்று வாழ்கின்றனர். ஐம்புலன்களின் தேவைகளை நிறைவு செய்வதிலேயே தங்களுடைய வாழ்வின் தேடல்கள் அனைத்தையும் அமைத்துக் கொள்கின்றனர். அதையும் தாண்டி ஆன்மீகம், கடவுள் போன்றவை இருப்பதை மறந்துவிடுகின்றனர். தங்களது ஐம்புலன்களுக்கு தீனி போடுவதே தங்களின் வாழ்வில் மகிழ்ச்சியைக் கொண்டுவரும் என்று செயல்படும் இவர்கள் இறைவன் தரும் விருந்தில் பங்கெடுப்பதில்லை.

இவ்வாறு இறைவன் தரும் மாபெரும் மகிழ்ச்சியான வாழ்விற்கான வாய்ப்பைப் புறக்கணித்துவிட்டு, தங்களின் கேட்டை தாங்களாகவே தேடிக்கொள்வர் பலர்.

(ஆ) அடுத்ததாக, ***இறைவனது விருந்தில் பங்கெடுக்கும் அனைவருமே*** அவர் தருகின்ற வாழ்வைப் பெற்றுக்கொள் கின்றனரா என்ற கேள்வியை எழுப்பும்போது, அதற்குப் பதில் 'இல்லை' என்று வருகின்றது. இன்றைய நற்செய்தியில் விருந்தில் பங்கெடுத்தவர்களில் திருமண ஆடை அணியாத ஒரு மனிதன் புறந்தள்ளப்பட்டதாக வாசிக்கிறோம். அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் விருந்தில் பங்கேற்க முடியும் என்றாலும், அதிலும் குறைந்தபட்ச தகுதியாக எதிர்பார்க்கப்பட்டது திருமண ஆடை! இந்தக் குறைந்தபட்ச தகுதியைக்கூட பூர்த்தி செய்யாததன் காரணமாக அம்மனிதன் புறந்தள்ளப்பட்டான்.

இறைவனது விருந்தாம் திருவிருந்தில் பேங்கேற்போர் தகுதியான விதத்தில் பங்கேற்கும்போதுதான் அவ்விறைவன் தரும் முழுமையான வாழ்வையும், நிறைவான மகிழ்ச்சியையும் பெற முடிகிறது. தகுதியற்ற விதத்தில் பங்கேற்போர், திருமண ஆடையின்றி வந்திருந்த மனிதனைப்போல், தங்களுக்குத் தாங்களே தீமையை வருவித்துக் கொள்கின்றனர். எனவேதான் புனித புவுல், "எவராவது தகுதியற்ற முறையில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராகவே குற்றம் புரிகிறார். எனவே ஒவ்வொருவரும் எதிராகவே தம்மையே சோதித்தறிந்தபின்பே, இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருக வேண்டும்" என்கிறார் (1கொரி.11:27-28). இதற்கு உதவியாகத்தான் திருப்பலியில் இரண்டுமுறை இறைவனின் மன்னிப்புத் தேடப்படுகிறது: ஒன்று, திருப்பலியின் தொடக்கத்தில்; மற்றொன்று, திருவிருந்து பெறுவதற்குமுன் (உலகத்தின் பாவங்களைப்....) துரதிஷ்டவசமாக, இது சடங்காகவே இருந்துவிடுகிறது.

எனவே தருமண ஆடையாம் நீதிச் செயல்களை (தி.வெ.19:8) செய்வதன் மூலமும், அதில் தவறுகின்றபொழுது இறைவனது மன்னிப்பை மனமுருகத் தேடுவதன் மூலமும், இறைவன் தரும் விருந்தை சுவைப்போம்; வாழ்வைப் பெறுவோம்.



## நசரேத்தூர் மரியா 36

Sr.M.லில்லி மரி ME,
புதுச்சேரி.



**முதல் நாள் காலை:** உயர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து வேறு ஒரு தீர்ப்பு அளிப்பதை நாம் காண்கிறோம். இயேசுவுக்குப் பிலாத்து அளித்த மரண தண்டனைதான் இறுதி தீர்ப்பா? "மனிதா! என் மகனுக்கா நீ மரணத் தீர்ப்பளித்தாய்?" என்று கூறி கடவுள் இயேசுவை உயிரோடு எழுப்பிவிட்டார் என்றும் எழும்பிவிட்டார் என்றும் கூறலாம். இதுதான் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு.

மரியா என்ன ஆனார்கள்? இராவுணவு நிகழ்ந்த மாடி அறைக்கு ஏறிச் சென்றிருப்பார்களோ? புனிதப் பெண்களும் உடன் சென்றிருப்பார்களோ? தன் மகனின் நினைவுச்சின்னமாக மரியா எதைத் தன்னுடன் எடுத்துச் சென்றிருப்பார்கள்? ஒருவேளை அந்த மூன்று ஆணிகள், முள்முடி அவற்றை மட்டும் எடுத்துச் சென்றிருப்பார்களோ? இப்படி நடந்திருக்கலாம் என்று கற்பனை செய்து மரியாவின் துயரங்களைச் சற்று ஆழ்ந்து தியானிப்பதில் தவறில்லை.

அவற்றை ஒரு தட்டில் வைத்து உற்று நோக்குகிறார்கள். இரத்தக்கறை படிந்த அந்த ஆணிகளைக் கையில் எடுத்து தொட்டுப் பார்க்கிறார்கள். என் மகனை நான் தாங்கிய கரங்கள் எவ்வளவு மென்மை யானவை. அவரைக் கொன்ற ஆணிகள் எவ்வளவு கூர்மையானவை. கல்லான இதயத்தை எடுத்துவிட்டு தசையாலான இதயத்தை மனுக்குலத்துக்கு அளிக்க வந்தவருக்கு ஆணிகளைக் கொடுத்து விட்டனரே! மனித மனங்களை மாற்றி சாந்த மாக்க வந்தவர்க்கு கூர்மையான முள்முடி... இப்படிப் பல எண்ண அலைகள் அவர்களுடைய சிந்தையைக் கசக்கிப் பிழிந்திருக்க வேண்டும். அப்போதும் அடி மனதில் "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லியிருப்பார்கள்.

இயேசுவின் இறுதி மூச்சு வரை அவரைச் சோதித்த சாத்தானுடைய வேலை முடிந்துவிட்டது. எனவே எங்குச் சென்றிருப்பான்? தன் சொந்த தொழிலுக்குச் சென்றிருப்பான். அதாவது குற்றம் செய்யும் வரை ஒருவரை அந்தக் குற்றம் குற்றமே இல்லை என்று காட்டி அதன் மீது கவர்ச்சியை ஏற்படுத்துவது. குற்றம் புரிந்தபின் அந்தக்குற்றத்தை மேலும் பெரிதாக்கிக் குத்திக் குத்தி மனதை வதைப்பது. இதற்குப் பலியான யூதாஸ் அந்த வாதனைகளை அனுபவித்தான். அந்த முப்பது வெள்ளிக் காசுகள் அவ்வளவு சீக்கிரமே அவனுக்குச் செல்லாக் காசுகளாகிவிட்டன. எனவே தேவாலயத்தில் வீசி எறிந்துவிட்டான். முடிவு ஒரு முழக்கயிறும் மரக்கிளையும்.

மரத்துக்கும் வீழ்ச்சிக்கும் நமது மீட்புக்கும் எவ்வளவு தொடர்பு! மரக்கிளையில் இருந்து சாத்தான் ஏவாளை ஏமாற்றினான். மரக்கிளையில் யூதாசின் உயிரைப் பறித்தான். ஆனால் மரத்திலிருந்தே இயேசு நமக்கு மீட்பு தந்தார்.

மத்தேயு நற்செய்தியின்படி வானதூதர் திருத்தூதரைக் கலிலேயாவுக்குப் போகச் சொன்னதாக கல்லறைக்கு அதிகாலையில் சென்ற பெண்கள் சொன்னார்கள். இயேசு முதலில் தன் தாய்க்குத் தோன்றியிருக்கமாட்டாரா? தோன்றியிருக்கலாம். அதற்கு ஆதாரம் இல்லை. மனித உள்ளத்தோடு ஆராய்ந்தால் தோன்றியிருக்க வேண்டும். ஆனால் இயேசுவின் மனப்பான்மையில் சிந்தித்தால் அவர் தம் தாய்க்கு என்று தனிச் சலுகை காட்டியிருக்கமாட்டார். ஏனெனில் அவர் முன்னரே "யார் என் தாய்?" என்று கேட்டு, தான் படைத்த இறையரசில் இரத்த உறவுக்கு முன்னுரிமை தரவில்லை.

அதன் பின் மரிய மதலேனாளுக்குத் தோன்றியது, திருத்தூதர் காலியான கல்லறையைக் கண்டது எதுவும் பற்றி இங்கு பேசத் தேவையில்லை. ஏனெனில் "இயேசுவோடு மரியாவின் வாழ்வு" இதுதான் இக்கட்டுரையின் மையக்கருத்து. மரிய மதலேனாள் தன்னை இயேசு "மரியா" என்று பெயர் சொல்லி அழைத்ததைச் சொல்லிப் பெருமைப்பட்டிருப்பார்கள்.

கதவுகள் மூடியிருக்க இயேசு அவர்கள் நடுவில் வந்து நின்று "உங்களுக்குச் சமாதானம்" என்று வாழ்த்துகிறார். மாதாவும் அங்குதான் இருந்திருக்க வேண்டும். அவர்கள் காதிலும் மகனின் குரல் விழுந்திருக்கும். தனக்குக் கொடுத்த ஒரு மீன் துண்டை இயேசு சாப்பிடுவதை மாதா எப்படிப் பார்த்திருப்பார்கள்! "பாருங்கள், என்னைத் தொட்டுப் பாருங்கள். நீங்கள் பார்க்கும் தசையும் எலும்பும் ஆவிக்குக் கிடையாது" என்று அவர் சொன்ன போது மாதாவுக்குத் தொட்டுப் பார்ப்பதைவிட ஓடி கட்டி அணைத்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றியிருக்காதா? இப்படிச் சிறு சிறு சம்பவங்களைக் கற்பனை செய்து பார்த்து மாதாவின் உணர்வுகளில் பங்கு பெறுவது எந்த விதத்திலும் நமது விசுவாசத்தைக் கொச்சை படுத்தாது.

இயேசு உயிர்த்துவிட்டார் என்று பெண்களும் திருத்தூதர்களும் சொன்னதைக் கேட்ட மரியாவின் இதயம் அக்களித்திருக்கும். சுக்கு நூறாக உடைந்த அவருடைய இதயம் இனி ஒருபோதும் உடையாதபடி ஒட்டிக்கொண்டிருக்கும். மீண்டும் ஒரு முறை "என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றிப் பாடுகின்றது" என்று அக்களித்துப் பாடியிருப்பார்கள். எனவேதான் திருச்சபை உயிர்ப்புக் காலத்தின் மூவேளை செபத்தில் "பரலோகத்துக்கு இராக்கினியே மனம் களிகூரும்" என்று செபிக்கிறது.

எட்டு நாட்களுக்குப் பின் தோமா மற்ற சீடருடன் இருக்கும்போது இயேசு அவர்களுக்குத் தோன்றுகிறார். நேரே தோமையாரிடம் சென்று "இதோ என் கைகள். இங்கே உன் விரல்களை இட்டுப் பார்..." என்கிறார். அவர் கதிகலங்கி காலில் விழுகிறார்... மரியா இந்த வார்த்தைகளைக் கேட்டு "ஐயோ! இன்னும் காயங்கள் ஆறவில்லையா?" என்ற ஆதங்கத்தோடு எட்டிப் பார்த்திருப்பார்கள் அல்லவா? தொடரும்.

### இவ்வாரத்தின் இறைவார்த்தை

"கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக் கல்லாயிற்று. ஆண்டவரால் இது நிகழ்ந்தது." (மத் 21:42)

### அன்னைக்குக் கரம் குவிப்போம் – 33



(முற்கால தற்காலச் செபங்கள்–தமிழாக்கம் ச.லில்லி மரி)

*08–10–2017* **புனித ஆன்செல்ம்**

ஓ மிகவும் சாந்தமான அன்னையே! மேலான மீட்பின் அன்னையே மா பெரும் புனிதம் உம்மில் மிளிர்கிறது. நீர் மிகவும் வல்லமை உள்ளவர். மிகவும் நல்லவர். நீர் வாழ்வையே பெற்றெடுத்தவர். நீர் இனிமையின் ஆலயம். தவறுகளால் கிழிக்கப்பட்ட என் இதயத்தை உம்மிடம் ஒப்படைக்கிறேன். அதை மனமிரங்கி உமது பேறுபலன்களாலும் செபத்தாலும் குணப்படுத்தும். ஓ இனிய அன்னையே! மரியே! என் ஆன்மா எனக்கே அந்நியமாகிவிட்டதுபோல உள்ளது. ஓ தாயே நீர் என்னைக் குணமாக்கும் பொருட்டு நீர் என் பாவங்களை அறிய வேண்டும். மிகுந்த வல்லமையையும் மிகுந்த பாசமும் உள்ள மரியே உம்மிடமிருந்தே இரக்கம் சுரக்கிறது. என்னுடைய மிகுந்த ஏழ்மையில் உமது இரக்கத்தை வேண்டுகிறேன். என் ஏராளமான பாவங்களுக்கு முன் உமது இரக்கம் வலிமை இழந்துவிடுமா? என் பாவங்கள் எவ்வளவுக்கு என்னைத் தாழ்த்துகிறதோ அவ்வளவுக்கு எனக்கு உமது மன்னிக்கும் இரக்கம் தேவை. சாந்தமான தாயே! உம் மகனிடம் எனக்காக வேண்டும். ஆமென்.



# பிணைப்பும் பிளவும்

– சுவாமி ஆ. லூயிஸ்.

தனது சாயலாகப் படைக்கப்படும் மனிதம் சிதைவுறுவதை செம்மைப்படுத்த பல்வேறு சமயங்கள் உலக வரலாற்றில் பிறந்து, மறைந்து, தொடர்வதை இன்றும் நாம் காணுகின்றோம். அவற்றில் உறுப்பினர்களாக இருக்கின்றோம். இன்றைய சமயங்களை நாம் சந்திக்கும் போது பிளவுகளையும், பிணைப்புகளையும் பரவலாக அனைத்து சமயங்களிலும் நாம் காண்கின்றோம். ஒரு சமயம் கூட, சமயத்தின் சாரத்திற்கு ஏற்ப சமய வாதிகள் அனைவரையும் ஒருமித்து கட்டி எழுப்ப முடியாமல் பல உட்பிரிவுகளைக் கொண்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. அவரவர்களும் தங்கள் சமயத்தை உணர்ந்து பார்த்து ஆய்வு செய்து, புதுப்பித்து, நம்பிக்கையில் வளர்வது காலத்தின் கட்டாயமாகும்.

**விளிம்பில் வேதங்கள்:** ஒவ்வொரு வேதத்திற்கும் முக்கியமான நான்கு கூறுகள் உள்ளன: (Community) சமய சட்டங்கள் (Code) சமய வழிபாடு (Cult) சமய வாழ்க்கை முறை (Conduct). இக்கூறுகளை பராமரிக்க ஒவ்வொரு வேதத்திலும் பொறுப்பானவர்கள் உண்டு. சமயத்தின் அமைப்புகளிலும் ஆட்களிலும் பலமும் பலவீனங்களும் உண்டு. ஆரோக்கியமாக இருக்கவும் இயங்கவும் ஆயிரம் வாய்ப்புகள் உண்டு. மனித பலவீனத்தினாலும், பல்வேறு சோதனைகளினாலும், விசுவாசக் குறைவினாலும் வேதங்கள் ஊன்றி நிற்காமல், விளிம்பில் வேதனைப்படுகின்றன. சமயவாதிகள் மத்தியில் சாதி உணர்வு, இன உணர்வு, மொழி உணர்வு, பொருளாதார உணர்வு, உயர்வு தாழ்வு என்ற உணர்வு, பய உணர்வு போன்ற பல எதார்த்தங்கள் மக்களை ஒற்றுமையாக வாழ வைக்க முடியாமல் இருக்கின்றன. உட்பூசல்களோடு, வெளிப்பூசல்களும் இடம் பெற சமயவாதிகள் பல்வேறு நிலைகளில் பிரிந்து, பலவீனமாகி இருப்பது உண்மை.சமய சட்ட திட்டங்களை சிலர் தீவிரமாக கடைபிடிக்க, சிலர் மேலோட்டமாக பன்பற்ற சட்டத்தின் சாரம் சாயமிழக்கிறது. வழிபாட்டு காரியங்கள் பணம், வசதி, வேண்டியவர்கள் என்று சமூக நிகழ்வுகளாகின்றன. வாழ்க்கை முறையும் அவரவர்களின் வசதிக்கேற்ப அமைகிறது.

இச்சூழ்நிலையில் சமயத்தைப் பின்பற்றுவோர் பலவிதமாகப் பிரிந்து, கடமைக்கு அல்லது தேவைப்படுகின்றபோது சமயத்தை நெருங்குகின்றன அல்லது பொருட்படுத்தாமல் ஒதுங்கி இருக்கின்றனர். இவைகளை எல்லாம் யார், எப்போது, எப்படி சரிசெய்து விளிம்பிலும் வேரிலும் சமயங்கள் பயன்புரிய பாடுபடுபவர் எங்கே என்று தேடுவோம், வேண்டுவோம்.

**சமயத்தின் சாரம்:** மணல் மீது கட்டப்படும் வீடு எளிதில் பாதிக்கப்படும். பாறையின் மீது கட்டிய வீடு நிலைத்து நிற்கும். ஒவ்வொரு சமயமும் தனது சமயத்தின் சாரமான இறை சக்தியில் ஊன்றி நின்றால்தான் நிலைத்திருக்கும். என்னைப் பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய முடியாதென்பதை எல்லாரும் சரியாகப் புரிந்து கொண்டு நம்புவோம். கடவுளின் அருளால்தான் சமயங்கள பிறந்தன, வளர்கின்றன, நிலைத்து நிற்கின்றன. சமயத்தின் பொறுப்பாளர்கள், பங்கேற்பாளர்கள் எல்லாரும் இறை அருளில் என்றும் வளர்வதுதான் சமயத்தின் சாரமாகும். சமயங்களை சுய நலத்திற்கு பயன்படுத்தாமல், இறைப்புகழுக்காக, மக்களின் நலனுக்காக பாடுபடுவதே சரியான அணுகு முறையாகும்.

விளிம்பில் இறுப்போர் விளிம்போடு செல்வர், கொஞ்சம் ஆழத்தில் இருப்போர் அனைத்தையும் ஆண்டவரைப் போல், அனைத்து வாழ்வர், வாழ வைப்பர் என்ற வழி முறையை, நெறிமுறையை நன்கு புரிந்து நம்புவோம். இம்மக்கள் உதட்டால் என்னைப் போற்ற, அவர்களின் உள்ளமோ விலகியுள்ளது என்பதையும் உணர்வோம். வேரும் சாரும் இருந்தால் தான் மரம் வளமாக இருக்கும், கனிகளைத் தரும் என்பது தெளிவாகட்டும். விசுவாசமில்லாத சமய வாழ்வு சுய நலவாழ்வாகும். சமயத்தைப் பயன்படுத்தி சுயநலத்தைத் தேடும் சோதனையில் இருந்து நம்மையும் மற்றவர்களையும் பாதுகாப்பது முக்கியமாகும். சம்ரதாயத்திற்காக சமயம் இல்லை, சாதிப்பதற்காக சமயம் உள்ளது, அடிப்படை வாதத்திற்காக சமயம் அல்ல, அடிப்படை நம்பிக்கையை வளர்க்க சமயம் உள்ளது. அவரவர் பிரியத்திற்கும் வசதிக்கும் ஏற்ப சமயத்தைப் பயன்படுத்தாமல், கடவுளின் பிரியத்திற்கும் அருள்வாக்கிற்கும் உடன்படுவதற்கே சமயம் என்பதை ஏற்போம். வேற்றுமையில் விலகிவிட்டது, ஒற்றுமையில் ஒன்றுபடுவதே மெய்யான சமயமாகும். ஒரே கிறிஸ்துவில் கிறிஸ்தவர்கள் ஒன்றுபட்டு இருப்பதே இயேசுவின் இறுதி வேண்டுதல் என்பதை கிறிஸ்தவர்கள் மறவாது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாக இருப்பதே உலகிற்குச் சான்றாகும்.

**மனிதமே சமயம்:** கடவுள் ஒவ்வொருவரையும் தன்னைப் போலவே படைத்து பராமரித்து வருவதால், ஒவ்வொருவருக்குள்ளும் புதைந்திருக்கும் புதையலை வெளிப்படுத்தி வாழ்வை வளமாக வாழ முயல்வது பொருள்மிகு வாழ்வாகும். ஒவ்வொருவருமே சமய உணர்வோடு வாழவே கடவுள் நம்மை படைத்துள்ளார். சமயம் என்பது உறவு,தோழமை, அன்பாகும், இவைகளின்றி யாரும் பிறப்பதில்லை. எனவே ஒவ்வொருவரும் சமய உணர்வு கொண்டவர் என்பது இயல்பு. அடிப்படையில் சமய உணர்வு கடவுள் அருளும் கொடையாகும், யார் எந்த சமயத்தில் இருப்பது என்பது அவரவர் சுதந்திரமாகும் என்பதையும் தெளிவாக்கிக் கொள்வோம். கடந்த கால கசப்பு அனுபவங்களை எல்லாம் இக்காலத்தில் இருப்பவர்கள் மன்னித்து மறந்து, இன்றைய வளர்ச்சிக்கு ஏற்ப ஒவ்வொரு சமயத்தையும் மதித்து, பல்சமய உணர்வோடு, சமாதானமாக, ஒற்றுமையாக இறையரசில் வளர்வோம். சமயத்தின் பெயரால், கடவுளின் பெயரால் யாரும் யாருடைய உயிரையும் பறிப்பதற்கு உரிமை இல்லை என்பது தெளிவாகட்டும். இன்றும் இடம் பெறும் சமயக் கொலைகள் எதையும் யாரும் வளர்க்க, பாதுகாக்க இடமில்லை. கடவுள் உயிரை எடுப்பவர்கள் அல்ல, என்றும் உயிரைப் பொழிபவராகத்தான், சிலுவையிலும் வாழ்வை வழங்கிக் கொண்டு வருகிறார்.

கடவுள்முன் அனைவரும் சமம் என்றாலும் அன்றாட வாழ்வில் மக்களை வழிநடத்த மாதா, பிதா, குரு தெய்வமாக கடவுள் கொடுத்திருக்கிறார். இந்த அமைப்பை ஆரோக்கியமான முறையில் பாதுகாப்பது, வளர்ப்பது, பயன்படுத்துவது நல்லது. நல்ல பெற்றோர்கள், இருந்தால்தான் பிள்ளைகள் ஞானப்பாலை அருந்தி நல்லவர்களாக வளர இயலும். நல்ல வழி காட்டிகளான குருக்கள் அதாவது இதயத்தில் இறைவனை அனுபவித்தவர்கள், அதை அவ்வாறே பகிர்ந்து கொள்பவர்கள் இருந்தால்தான் சமயங்கள் செழிக்கும். போலி குருக்களும், வேஷம் போடும் குருக்களும் சமயங்களில் இருப்பின் எல்லார்க்கும் தொல்லைகள் பெருகும். பலவீனங்களைக்குறைத்து, ஆண்டவருடைய பலத்தை பெற்றோர்கள், குருக்கள் தங்களில் வளர்த்துக் கொள்வது நல்லது. கடவுள் மன்னிப்பது போல நாமும் மன்னித்து மறந்து வாழ ஆரம்பித்துவிட்டால் புதிய மனிதம் புதிய உலகம் மலர்ந்ததாகும். எனவேதான் கடந்ததை மறந்து கண்முன் இருக்கும் கடவுளை தரிசித்து, இலக்கு நோக்கி அனைத்து சமயங்களும் பயணித்தால் விடுதலை, அமைதி, மகிழ்வு இவைகளை அறுவடை செய்வோம், வாருங்கள், வளருங்கள், வேண்டுங்கள். ●



# இயேசுவே வழியும், ஒளியும் உண்மையும்

சிந்தனைச் செல்வர், பேராசிரியர் அ.குழந்தைராஜ்-காரைக்குடி

**சூ**ரியன் உதித்தபின் ‘சிம்னி’ விளக்குக்கு என்ன வேலை?

இயேசு உயிர்த்தபின் ‘சட்டத்திற்கு’ என்ன வேலை?

கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதர்களை மதிப்போம்.

கிறிஸ்து காட்டும் எளிய வழிகள் மனிதனை மோட்சத்திற்கு இட்டுச்செல்லும்.

இன்று மனிதர்கள் மதிக்கப்படவில்லை. மாறாக மிதிக்கப் படுகிறார்கள். கடவுள் மனிதர்களை வானதூதர்களைக் காட்டிலும் சற்று குறைவாகப் படைத்தார். இன்று பிறக்கும் குழந்தைகள் கடவுளின் சாயலைப் பெறுகின்றன. அவைகளும் மதிக்கப்பட வேண்டும். உலக அமைதிக்காக இன்று வேண்டியது பொருள் சார்ந்தவைகளும் மட்டுமல்ல, அருள் சார் எண்ணங்களே. என்னதான் பொருள், பணம், பதவி, கௌரவம் இருந்தாலும் ஒரு மனிதனின் வாழ்க்கையில் என்ன சாதித்து விட முடியும். ஓர் அறையில் படுக்க வேண்டும். அதுவும் ஆறடிக் கட்டிலில் பணக்காரன் என்பதால் பல அறைகளில் தலைக்கு ஒன்று காலுக்கு ஒன்று, கைக்கு ஒன்று படுக்க முடியுமா? அல்லது வேளைக்கு அரை கிலோ கறியும், 10 முட்டையும் சாப்பிட முடியுமா? முடியாது. எனவே அழிந்து போகும் செல்வத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அதைப் பயன்படுத்தி ஆத்துமாக்களை ஆதாயமாக்கிக் கொள்வோம் அவர்களும் “அபிரகாமின் மக்கள்தானே!”

அதே பணத்தின் தொல்லையில் வாழும் மனிதனின் குடும்பங்களில் சமாதானம் இல்லை, அன்பில்லை. இன்று பரவலாக விவாகரத்து பேசப்படுகின்றது. நடைமுறைக்கு வருகிறது, ஏன்? பெண்ணை ஏன் விவாகரத்து செய்கிறார்கள். அவர்கள் “**விவகாரத்து செய்யப்படுவது மற்ற பெண்களை மணம் முடிக்க!. மணம் முடிப்பது எதற்கு விவாகரத்து செய்ய**” ஓர் இணைபிரியாத தம்பதியருக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு விவாகரத்திற்காக நீத மன்றம் சென்றனர். அவர்களுக்கு மூன்று குழந்தைகள் இருந்தன. கணவன் ஒரு குழந்தையையும் மனைவி ஒரு குழந்தையையும் பிரித்துக் கொள்ள இசைந்தார். மீதியுள்ள ஒரு குழந்தையை யார் பராமரிப்பது என்பதில்தான் சிக்கல் தோன்றியது. எனவே நீதிபதி விவாகரத்து இப்போது வேண்டாம். இன்னும் இரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் நான் அதை பரிசீலிப்பேன் என்றார். ஏனெனில் அவர் எண்ணியது. ‘இன்னும் இரண்டு ஆண்டுகள் அவர்கள் இணைந்து இருந்தால் இன்னுமோர் குழந்தை பிறக்கும். ஆக மொத்தம் 4 குழந்தைகளையும் இரண்டு இரண்டாகப் பிரித்துக் கொடுத்து விடலாம்’ என்று எண்ணினார்.

ஆனால் “கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக் கட்டும்” என்ற வேத வாக்கியும் நிறைவேறத்தக்கதாக, அத்தம்பதியருக்கு அந்த இரண்டு ஆண்டுகளில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. ஆக மொத்தம் 5 குழந்தைகள்.

கடவுளின் திட்டத்தை அறிந்த தம்பதியரும், நீதிபதியும் விவாகரத்து வேண்டாம் என முடிவு சய்தனர். பின்னர் கடவுளின் அருளால் அவர்கள் நீடுழி இணைபிரியாமல் வாழ்ந்தனர்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சட்டம் மக்களை அடிமைப் படுத்தி வைத்திருந்தது. மோயீசன் பெற்ற 10 கட்டளைகள், படிப்படியாக உயர்ந்து, ’சின்னது பெரியதாக’ 6000 கட்டளை கள், இணைச்சட்டம், துணைச் சட்டம், கிளைச் சட்டங்களாக மாறி உயர்ந்தன. இதனால் மக்கள் எப்போதும் சட்டத்தை மீறுபவர்களாகவே கருதப்பட்டனர். விடிவு காலம் என்பதே இல்லை எனும் அளவுக்கு சட்டத்தால் அடிமைப்படுத்தப் பட்டனர்.

ஆனால் இயேசுவின் அருள் ஆட்சிக் காலத்தில் சட்டம் சாபமாகி, அந்த சாபத்தை தன்மேல் ஏற்று, சட்டத்தை ஒழித்து விட்டார்; (கலா.3:13) சிலுவையில் அதை அறைந்தொழித்தார். (கொலோ.2:14) இயேசுவின் மீட்புத் திட்டத்தில் மனிதனுக்கு முழு விடுதலை உண்டு. **இயேசுவின் வருகை அவருக்கு முன்னதாக உள்ள எல்லாவற்றையும் வெறுமையாக்கி செல்லாததாக்கிவிட்டது.**

பழையன மறைந்தொழிந்தன. புதியவை தோன்றின. ஒருவன் எவ்வளவு பாவியாக வாழ்ந்திருந்தாலும் அவனை இயேசு எல்லாப் பாவங்களிலிருந்தும் மன்னிக்கிறார். “ஒருவன் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்தால் புதியதொரு படைப்பாகி விட்டான்” (2கொரி.5:17).

நிக்கோதேமுவிடம் இயேசு “எவனும் மேலிருந்து பிறந்தாலன்றி கடவுளுடைய அரசைக் காண முடியாது” என்று கூறினார். புதிய பிறப்பு என்பது புதிய ஆவியாலும் பிறப்பது. அதற்கு காலம் வெகு நேரமாகாது. மனம் மாறுவது என்பது கொஞ்சம் கொஞ்சமாக மாறுவதல்ல. ஒரு நாடிப் பொழுதில் மாறுவது, நல்ல கள்ளனின் மனமாற்றம். சமாரியப் பெண் ணின் மனமாற்றம் - விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணின் மன மாற்றம் - ஊதாரி மைந்தனின் மனமாற்றம், சக்கேயுவின் மனமாற்றம், போன்றவை சில உதாரணங்கள்.

12 ஆண்டுகளாக பெரும்பாட்டினால் துன்பப்பட்ட பெண் அந்தக் கூட்டத்தில் இருப்பதும் அவள் தன்னிடமிருந்து புறப்பட்ட வல்லமையை இயேசு உணராமல் இல்லை எனினும் தீட்டுப்பட்டவளைக் காண்பது குற்றம்; தொட்டால் குற்றம் பாவம் என்று கருதப்பட்ட 12 ஆண்டுகளாக வருந்திய பெண் ணைதான் மதித்து, போற்றி, வாழ்த்தி பல்லாயிரக்கணக்கான மக்கள் நடுவிலே அவளை **வரச் செய்து மதித்தாரே அதுதான் இயேசுவின் வழி.** இப்படி குணம் பெற்ற பெண் பகிரங்கமாக இயேசுவால் பாராட்டப்பட்ட பெண்ணை அந்தக் கூட்டத்தில் உள்ளவர்கள் எல்லோரும்; இயேசுவைத் தொட்டுக் குணம் பெற்ற அந்தப் பெண்ணை, தாங்களும் தொட்டுப் பார்த்திருப் பார்கள், கைகுலுக்கி வாழ்த்தியிருப் பார்கள்.. தோளைத் தட்டிப் பாராட்டியிருப்பார்கள், காலில் விழுந்து வணங்கியிருப்பார்கள். **யாரைத் தொடக்கூடாது என்று மக்கள் நினைத்தார்களோ அவரை எல்லாரும் தொட்டு விடும் முயற்சியில் இறங்கியிருப்பார்கள் அல்லவா! எப்படி இயேசு காட்டிய வழி?**

**இயேசுவே வழியும், ஒளியும், உண்மையும்:** கடலில் பயணம் செய்யும்போது, கப்பலில் அசைவு புயலின் சீற்றம், காற்றின் அலைக்கழிப்பு, மழையிரைச்சல், மின்னல், இடி, வெயில், வெப்பம் போன்றவைகளின் நடுவில் பயணம் செய்யும், கப்பலின் ’கேப்டன்’ இதற்கெல்லாம் அஞ்சாமல் தான் எதையோ தேடுவது போல திகைக்கிறான், எதிர்பார்க் கிறான். அவன் எதிர்பார்ப்பது என்ன? ஆம் அவன் எதிர்பார்ப்பதுதான் அடைய விரும்பும் ’களங்கரை விளக்கம்’ எத்தனையோ விண்மீன்கள், சூரியன், நிலா, காட்டாத, தராத, கொடுக்காத முழு நிறைவு திருப்தி அந்த காப்டனுக்கு கலங்கரை விளக்கத்தைக் கண்டவுடன் கிடைக்கிறது. காரணம் அசையும் நட்சத்திரங்கள், சூரிய ஒளி, நிலவைக் காட்டிலும் அசையாமல் நின்று, தத்தளிக்கும் கரை சேர நினைக்கும் கப்பல்களுக்கு, நற்செய்தியை அறிவிப்பது கலங்கரை விளக்கமே. அந்தக் கலங்கரை விளக்கம்தான் நம் ஆண்டவராகிய இயேசு. இயேசுவின் மீது நம் கண்ணைப் பதிப்போம். மீட்புக்கரை ஏறுவோம்.

“நம்மீது அவருக்கு அக்கறை உண்டு. நம் கவலைகள் அனைத்தையும் இயேசு மீது சுமத்தி விடுவோம் (1பேதுரு 5:7) அவர் காட்டும் வழி நடந்து அவர் தரும் அருளாலே விசுவாசத்தின் வழியாக மீட்பு அடைவோம் (எபேசி.2:8) ●

# மரியாள்-அமைதியின் அரசி

சென்ற இதழ் தொடர்ச்சி.. - **சகோ.மரிய சலேத், சென்னை.**

**ஸ்**தேவானின் அடக்கத்திற்கும் (தி.ப.8:2) முதல் திருத் தொண்டராகவும், இறைவார்த்தைக்கு ஞானத்தாயாகவும் இருந்து முதல் திருச்சபை குடும்பத்தை ஒன்றிணைத்து பாதுகாத்தாள். அன்னை இவ்வாறு செய்வதற்கு தேவையான சக்தி கடவுள்மீது அவர்கொண்ட நம்பிக்கையும், மற்றும் அவருடைய அமைதியும்தான்.

மரியாளின் மறுபெயர் அமைதி (Silence) அதற்கேற்ப மரியாள் எப்பொழுதும் தன்னைத் தாழ்த்தி அமைதி என்கின்ற துணியில் மூடி, மறைமுக வாழ்வு வாழ்ந்தாள். அவளுடைய அமைதி, பிறருக்கு உதவும் நல்ல இதயம், எதையும் ஏற்றுகொள்ளும் மனப்பான்மை. fecundity, fortitude, availability, receptivity, சுயஅடக்கம், மனித வளர்ச்சியில் பக்குவப் பட்டவள் இவற்றை மரியாளிடம் காணலாம். மரியாளை, நாசரேத்தூர் மரியாள் என்று அழைப்பார்கள். நாசரேத் என்றால் அமைதி, சமாதானம் எனப் பொருள்படும். அன்னை மரியாள் தன் பெயருக்கேற்ப வாழ்வு வாழ்ந்தார். நற்செய்தி களில் மரியாள் இரண்டு முறைதான் தென்படுவாள் மற்ற நேரங்களில் அமைதியின் இருப்பிடமாக இருந்து எப்பொழுதும் அதிகம் பேசாமல், அதிகம் சிந்திக்காமல் கடவுளின் பிரசன்னத்திலிருந்து, கடவுளை தியானித்து, மகிழ்வுடன் மன சந்தோஷத்துடன் வாழ்ந்தாள்.

அக்டோபர் மாதம் மாதாவின் வணக்க மாதம். மாதாவின் பக்தர்களாகிய நாம் பல்வேறு ஞானக் காரியங்கள் செய்து அன்னையை நாடி தேடி மன்றாடி வணக்கம் செலுத்து கின்றோம். நமக்கெல்லாம் அன்னை மரியாள். ஒரு மருத்துவராக, பொருளாதாரப் பிரச்சனை தீர்ப்பவராக, குணமளிப்பவராக, நமக்காக இயேசுவிடம், கடவளிடம் பரிந்து பேசுபவராக இருக்கின்றாள். ஆனால், அன்புத் தாயோ தன்னையே ஒரு ஏழையாக சேவகியாக மாறி இயேசுவை பெற்றெடுத்து அவர் வழியாக, அவள் வழியில் நம்மை ஒவ்வொரு நாளும் கருத்தரித்து பெற்றெடுத்து கடவுளுக்கு அர்ப்பணம் செய்து கொண்டிருக்கிறார். நாம் பாவிகளாயினும் ஓட்டம் ஓடுபவராகினும், ஊதாரி மைந்தனாகினும், அன்பார்ந்த மகனாயினும் மகளாயினும், காதல் (அன்பு) பித்தானாகினும் எல்லோரையும் அன்பால் அரவணைத்து ஒவ்வொரு நாளும் நம்மில் இயேசுவிற்கு புதுப்பிறப்பைத் தருகிறாள். இதனால் நாம் அனைவரும் தாயின் அழைத்தலில் கருத்தரித்து புதுப்பிறப்பாக மாற வேண்டும். அதாவது நம் செயல், சொல், கருத்தில், நடவடிக்கையில் சிந்தனையில் மனரீதியில், கிறிஸ்துவைப்போல் மனுஉரு எடுக்க வேண்டும். "கன்னிமரியாள் நாம் நாள்தோறும், மனமாற, நம்முடைய பலவீனங்களில் நமக்கு உறுதுணை யாக இருந்து கடவுளின் தாழ்நிலையை உணர்த்தி இயேசுவைபோல் வாழ துணை செய்வாள். அதனால் நம்முடைய ஆணவம், அகங்காரம், தற்பெருமையை விட்டு, அன்பு, அமைதி, தாழ்ச்சி, மன்னிப்பு, பொறுப்பு போன்ற குணநலன்களில் வாழ துணை செய்வாள். அந்தத்தாய் கேட்பதெல்லாம் ஒன்றே ஒன்று. "அவர் சொல்வதை எல்லாம் செய்யுங்கள்" (யோ.2:11) என்பதுதான். தினமும் 15 நிமிடம் காலையிலும் மாலையிலும் நேரம் ஒதுக்கி தியானித்தால் இயேசுவின், தாயின், ஆவியானவரின் வரம் கிடைக்கும். நம் மனமும் அமைதியுடன் நாள்முழுவதும் இருக்கும். இந்த பழக்கத்தை பின்பற்றினால் எந்த இரைச்சலும் நம்மை தாக்காது மன உறுதியுடன் வாழ்க்கையில் மகிழ்வுடன் இருக்கலாம். இதுவே மரியாள் சொல்லும் மந்திரம்.

"இயேசு சொல்வதை எல்லாம் செய்யுங்கள்", தியானியுங்கள். ●

# Sr. Yvonne Pierron (ME Congregation)

(Sr. லில்லி மரி)



இவர்கள் பிரஞ்சு சகோதரி. ப்ரான்ஸ் நாட்டில் அல்சாஸ் மாநிலத்தில் 1928–இல் பிறந்தார்கள். தம் 17–ஆம் வயதில் Missions Etrangères என்னும் நற்செய்திப்பணி சபையில் சேர்ந்தார்கள். மிகவும் இளைய வயதிலேயே அர்ஜண்டீனா வுக்கு மறைப்பணியாளராக அனுப்பப்பட்டார்கள். சபையின் சிறப்புப்பணிபடி சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட **"குவாரனி"** என்னும் செவ்விந் தியரிடையே பணியாற்றச் சென்றார்கள். புனித சின்னப்பரைப் போல ஊர் ஊராகச் சென்று ஆயனில்லா ஆடுகளைப்போல கவனிப்பாரற்று இருந்த அந்தப் பழங்குடி மக்களுக்குக் கல்வி கற்பித்தல் மருத்துவச் சேவை புரிதல், நற்செய்தியைப் போதிப்பது போன்ற பணிகளைச் செய்தார்கள். அப்போது அம்மக்கள் அதிகார வர்க்கத்தால் சுரண்டப்படுவதைத் தடுக்க அவர்களை ஒன்று சேர்த்து கூட்டாகச் செயல் படவும் தங்கள் உரிமைகளுக்காகப் போராடவும் கற்றுத் தந்தார். **"சாகும் வரை போராடு"** என்பது அவரகளுடைய விருது வாக்கு.

1977–இல் அர்ஜண்டீனாவில் உரிமை குரல் கொடுப்பவர்களை இராணுவ அடக்கு முறை அதிகார வர்க்கத்துக்கு ஆதரவாகக் கடத்திச் சென்று சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்து கொன்றது. அப்படி கொல்லப்பட்டவர்களில் எங்கள் **சகோதரிகள் அலீஸ் மற்றும் லியோனி** இருவரும் ஆவர். அதே சமயம் Sr. Yvonne–ம் தேடப்பட்டார்கள். ஓர் இரவு முழுவதும் அடர்ந்த புல் வெளியில் மார்பால் ஊர்ந்து சென்றார்கள். மேலிருந்து அவர்களைத் தேடிக்கொண்டிருந்த ஹெலிக்காப்டரின் பேரொளியில் இருந்தும் தப்பிப்பிழைத்தார்கள். அதன் பின்னர் பிரஞ்சு அரசின் பாதுகாப்புடன் அண்டை நாடாகிய **நிக்காரகுவா**–இல் அடைக்கலம் புகுந்து, சில ஆண்டுகள் அங்கு வாழ்ந்தார்கள். அர்ஜண்டீனாவில் அமைதி நிலவியபின் அங்குத் திரும்பிச் சென்று Misiones என்னும் பழங்குடியினர் வாழ் பகுதியில் இளைஞர்கள் இளம்பெண் களுக்காக ஒரு விடுதியையும் பள்ளியையும் அமைத்து அவர்கள் படித்து முன்னேற உழைத்தார்கள். அது ஒரு வித்தியாசமான விடுதி. அதாவது இவர்கள் பெற்றோர் வீட்டில் இருந்தால் என்ன சாப்பிடுவார்களோ அதைச் சமைக்காத பொருட்களாக அல்லது காய்கறிகளாகக் கொண்டு வரவேண்டும். அது இருக்கும் வரை அவர்களுக்கு அதை உணவாக அளிப்பார்கள். தீர்ந்துவிட்டால் சாப்பாடு இல்லை. மற்ற படிப்பு, விடுதியின் செலவுகளை சகோதரி கவனித்துக்கொண்டார்கள். இவர்களுடன் இரு வாரங்கள் நான் வாழ்ந்திருக்கிறேன். பசியாற உண்ண உணவில்லாமல் மேசையை விட்டு எழுந்த அனுபவம் எனக்கு உண்டு. இதனால் ஏராளமான கிராமத்து இளைஞர்கள் கல்வி அறிவு பெற்றார்கள்.

இப்படி மேலும் பல்வேறு பணிகளைச் செய்தார்கள். இதை அறிந்த சமூகநல ஆர்வலர்கள் அவர்களைப் பற்றி இரு திரைப்படங்களை எடுத்தனர். மேலும் சில நூல்களும் அவர்களைப் பற்றி எழுதப்பட்டன. மிக மிக ஏழையாக வாழந்தவர்கள். "யார் என் தாய்? யார் என் சகோதரர்?" என்று கேட்ட இயேசுவின் கேள்விக்குப் பதிலளிக்கும் விதத்தில் யாரிடம் பணி செய்ய அனுப்பப்பட்டார்களோ அவர்களைத் தன் மக்களாக ஏற்று இறுதி வரை அவர்களுக்காகவே வாழ்ந்து **செப்டம்பர் 29-ஆம் தேதி** அர்ஜண்டீனாவிலேயே உயிர் துறந்தார்கள். Misiones என்னும் மாநில ஆளுநர் எல்லாப் பள்ளிகளிலும் நாட்டுக்கொடி அரைக்கம்பத்தில் இறக்கப்பட்டுத் துக்கம் கொண்டாடக் கட்டளையிட்டார். அந்நாட்டு மீடியாக்கள் அவர்களுடைய வாழ்வை விளம்பரப்படுத்தின. அவர்கள் பணியைச் சுருக்கி ஒரே வார்த்தையில் **"மனித உரிமைக்காகப் பணி"** என்று கூறலாம். எங்கள் சபை கண்ட வீராங்கனைகள் பலரில் இவரும் ஒருவர். ●



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,**
திருச்சி.



## 17 ஆம் படலம்

யாவே கடவுள் ஏவிய நான்காவது ஈ வாதையால் எகிப்து நாடே பாழ்பட்டது; இவ்வாதை பார்வோனையும் எகிப்திய தெய்வங்களையும் தலைகுனிய வைத்தது. இது, கடவுள் மக்களாகிய இசுரயேலரை மீட்பதற்குரியஅடையாளமாயிற்று. இவ்வாதையினின்று தானும் நாடும் விடுபட மோசே, ஆரோனுக்குரிய ஆண்டவரின் தலையீட்டால்தான் இயலுமென்னும் முடிவுக்குப் பார்வோன் இரண்டாம் இராம்சேசு வந்தான்!

**68** **ஒரு மனிதன் மற்றொரு மனிதனை வெறுத்து, அவனுக்கு எதிராய்ச் செய்கிற அனைத்தும் இறைவனுக்கு எதிராகச் செய்வனவேயாகும். எவன் இறைவனின் படைப்பை அழிக்க வன்முறையில் இறங்குகின்றானோ அவனைத் தடுத்துத் தாழ்வுறச் செய்ய இறைவனே ஏதோ ஒருருவில் நேரில் வருவான் உறுதி!**

புரிந்திட வேண்டும், மனிதர்க் கெதிராய்ப்
 புரிகிற அனைத்தும் இறைக்கெதிர் ஆனது
வரிந்துநீ கட்டி இறைபடைப் பழிக்க
 வாளொடு அணுக்குண் டெடுத்திடு வாயெனில்,
சரிந்துநீ வீழ்ந்து தவித்திட படைத்தவன்
 தாழ்ந்திவண் இறங்கி வந்துமே காப்பான்!
நரியென நீஇரு, சிங்கமாய் அவனோ
 நானிலம் அதிர முழங்குவான் பார்நீ!

(வரிந்து நீ கட்டி-உன்னிடம் இருப்பது அனைத்தையும் பகைகொண்டெடுத்து; படைத்தவன் தாழ்ந்திவன் இறங்கி அனைத்தையும் படைத்துக் காக்கும் கடவுள் காத்திடக் கருணை புரிய வருவது உறுதி; புரிந்திட-அறிந்திட; புரிகிற-செய்கிற)

**69** **திருவருள் துணையின்றி எந்தஒரு மனிதனும் தன் பகுத்தறிவின் பலத்தைக் கொண்டு மட்டும் எதையும் நிரந்தரமாய்ச் சாதித்துவிட முடியாது. இப்பேருண்மையை எகிப்து அரசன் பார்வோனின் வாழ்க்கையில் நாம் காண்கிறோம். ஈக்களின் வாதையைத் தன்பலத்தால் போக்கமுடியாததால்தான் மோசேயின் வாயிலாய் யாவேயின் துணையை நாடுகிறான்.**

போதும் போதும் புதுமையின் மோகமே!
 புத்தியைத் தந்தருள் புரிந்திடும் கடவுளை,
ஏதும் செய்துநீ எதிர்த்திட முடியுமோ?
 எகிப்து அரசன் மோசேக்(கு) இணங்கி,
வாது புரிவதைக் கைவிட் டவரை
 வரவழை(த்து) ஈக்கள் வாதையைப் போக்க
தோது அதுவென, யாவே ஆணையால்
 தொலைத்திட ஈவதை வேண்டினன்; தெரிந்திடு!

(புதுமையின் மோகமே - நாகரிக வாழ்க்கையில் கொள்ளும் அதிதீவிர விருப்பமே; தோது அதுவென-தக்க வழி, உபாயம் அதுதான் என்று)

**70** **மனித மீட்பின் வரலாற்றில் இசுரயேல் மக்களை அடிமை நிலையிலிருந்து மீட்பதற்கு இறைவனே விண்ணிலிருந்து இறங்கி வருகின்றார்! அகலாமல் அவர்களுடன் இருந்து அவர்களைக் கானான் தேயத்திற்கு அழைத்துச் செல்லுகின்றார். அதிலே, இறையேசு மீட்பின் விண் வழி புலர்ந்து ஒளிர்வதை நாம் உணர்கின்றோம்.**

மனித மீட்பு வரும்வர லாற்றிலே
 மாபரன் இறங்கியே எகிப்திற்(கு) வந்தார்!
தனியாய்த் தவித்த இசுரயேல் மக்களைத்
 தம்உடன் இருப்பில் வைத்தவர் மீட்டார்!
இனிமேல் அடிமை நிலையவர்க்(கு) இலைஎன
 எகிப்தில் இருந்து கானான் சென்றிட,
புனிதர் அழைத்து ஏகிய அதிலே,
 பொலிந்த விண்வழி ஒளிர்வதைக் கண்டனம்!

(புனிதர் அழைத்து ஏகிய அதிலே - தந்தையாம் கடவுள் இசுரயேலரை அடிமை நிலையிலிருந்து மீட்டுக் கானானுக்கு அழைத்துச் சென்ற விடுதலைப் பயணத்தில் மன்னாவாக, உடன்படிக்கைப் பேழையில் அகலாது இருப்பவராகக் காண்கிறோம்)

# எழுவீர் புத்துலகம் படைத்திடுவீர்

## 14) கூடி ஜெபித்தால் - ஜெயம் கிடைக்கும்



இறை ஊழியன் அருட்திரு.**அ.பெலிக்ஸ் ஜோசப்,**சே.ச.
திருச்சி.

1945 ஆண்டு ஆகஸ்டு திங்கள் 6-ஆம் நாள் இரண்டாம் உலகப் போரின் உச்சக் கட்டம். அன்று ஜப்பானை பணிய வைக்க அமெரிக்கா அணுகுண்டை ஹிரோசிமா நகர் மீது வீசியது. இலட்சக்கணக்கான மக்கள் மாண்டனர். பெரும் சேதத்தால் அழிந்தது நகரம். அவ்வேளையில் நகரின் மையப்பகுதியில் உள்ள விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் எந்தப் பாதிப்பும் இல்லை. ஏனெனில் அங்குள்ள மக்கள் உருக்கமாக, பக்தியாக, ஒருமனப்பட்டு ஜெபித்து வந்தார்கள். அந்த ஜெப உணர்வு, அணுகுண்டின் சேதத் திலிருந்து விடுதலையைக் கொடுத்தது. எங்கே இரண்டு மூன்று பேர் ஒருமனப்பட்டு ஜெபிக்கின்றார்களோ, அங்கே நான் இருக்கிறேன் என்று இறைவன் அன்னை வழியே காப்பாற்றினார்.

மக்கள் ஒரு மனப்பட்டு ஜெபிக்கும் வேண்டுதலை இறைவன் பார்த்து, காது கொடுத்துக் கேட்டு, ஜெபிக்கும் மக்களைக் காப்பாற்று கின்றார். அன்னை மரியாளும் இறையேசுவின் பன்னிரு சீடர்களும் ஒருமனப்பட்டு ஜெபிக்கும் போது இயேசு அவர்களின் ஒன்றித்த ஜெபத்தைக் கேட்டார். அன்று திருச்சமூகத்தின் பெருவிழா. ஆவியான வர் அருள்பொழிவாய் இறங்கி வந்து அந்த அறையை, வளாகத்தைப் புனிதப்படுத்தினார். அக்னி நாக்கு வழியே ஆவியின் வரங்களைப் பெற்று புதுத்தெம்பு, புது வைராக்கியம், புதுத்துணிவுப் பெற்று புது உலகம் படைத்தனர். புதிய வானம், புதிய வையகம் உருவானது. புதிய மனமாற்றத்துடன், புதுப்பொழிவுடன் இயேசுவின் திருக்கூட்டம் மலர்ந்தது.

எங்கே ஒருமனப்பட்டு கூடி ஜெபிக்கின்றார்களோ அங்கே இறைவன் அற்புதங்களையும் அருள் ஆற்றல்மிக்கச் செயல்களையும் செய்கின் றார்.

முதல்முறை ஆவியின் அருங்கொடை மாநாடு பாளையங் கோட்டையில் நடைபெற்றது. இறுதி நேரம். நன்றி உணர்வோடு திருப்பலி நிறைவேற்றி முடிக்கும் தருணம். மழையின் அறிகுறி நம்பிக்கையில் இறைவிசுவாசத்தில் ஜெபித்து திருப்பலியை வழக்க மான கோலாகலத்தோடு நிறைவு செய்தனர். திருக்கூட்டமும் உற்சாகமாக பெருமிதத்துடன் கலைந்தது.

சேவியர் வளாகத்தில் இருந்து வெளியே வரும்போது மழை சோ வென்று கொட்ட ஆரம்பித்தது. மக்களுக்கு ஆனந்தம் வியப்பு. ஆச்சரியம். மூன்று நாட்கள் நடைபெற்ற ஆவியின் அருங்கொடை மாநாடு அனைவரின் கூட்டு ஜெபத்தால் ஜெய மாக நிறைவேறியது. இறைவனும் பூமியை நனைத்து தன் மகிழ்ச்சியால் மக்களை ஆசீர்வதித்தார். இதுதான் கூட்டு ஜெபம், குடும்ப ஜெபம், பலரும் கூடி ஒருமனப்பட்டு, ஜெபிக்கும் போது இயேசு ஆண்டவர் அவர்களின் ஜெப உணர்வைப் பாராட்டி அவர்களின் மன்றாட்டை ஏற்கின்றார்.

***ஜெபம்:*** ஜெபமே ஜெயம் என்று மொழிந்த இறைவா! உம் வார்த்தையின் வல்லமையை, ஆற்றலை அறிந்துள்ள நாங்கள் குடும்பமாக ஜெபிப்பதில் ஆர்வமாகப் பங்கேற்றுத் தூய ஆவியின் கனிகளால் நிரம்பி உம் அருளைப் பெற வரம் தாரும். - ஆமென். ●

**71** **இறைவன் வகுத்த மீட்புத் திட்டத்தின் காலம் கனிந்து வந்த போது இறைமகன் இயேசு இவ்வுலகில் ஏழையாய்த் தோன்றினார். அவர் வரவை நற்பேறாக ஏற்காத இஞ்ஞாலம் அவரைப் பகைத்து, சிலுவையில் அறைந்து கொக்கரித்த கொடுமையும் ஏனோ!**

காலம் கனிந்தே வந்தஅந் நாளிலே
 கடவுள் மகன்இவண் ஏழையாய்த் தோன்றினார்!
ஞாலம் அவர்தம் வருகையை ஏற்றே
 நற்பே றெனக்கண் டகம்மகி ழாதே,
மூலப் பரம்பொருள் திருவுளத் திட்டமும்
 முன்னிறை வாக்கால் அறிந்தும் அகந்தையால்,
சாலப் பகைத்து அவர்தமைச் சிலுவை
 தனில்அறைத் தாணவத் தணல்நின் றதேனோ!

(நற்பேறென - கிடைத்தற்கரிய பெரும் அருள்செல்வமென; ஆணவத் தணல் - ஆணவமாகிய கனிந்த நெருப்பு)

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி -170
**அக்டோபர் மாத வெளியீடு. (2017)**
**அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ், தாராபுரம்.**

**வா**ரம் தவறாமல் 111 ஆண்டுகளாக மலர்ந்து வரும் சர்வவியாபி இதழின் நறுமணத்தை முழுமையாக முகர்ந்து அனுபவித்துவரும் வாசகர் பெருமக்களுக்கு ஜெபம் நிறைந்த வாழ்த்துக்கள். நாம் ஜெபிக்கும் அன்னை மரியாளின் ஜெபமாலையைக் கி.பி. 1214ல் புனித சாமிநாதர் வழியாக அன்னை மரியாள் திருச்சபைக்கு வழங்கினார் என்பது உண்மை. புனித சாமிநாதர் பிரான்ஸ் நாட்டில் ஒரு காட்டுக்குள் சென்று பாவிகள் மனந்திரும்ப ஜெபித்தார். மூன்றாம் நாள் இவரது ஜெப தபத்தின் விளைவால் உணர்வற்ற நிலையில் இருந்தபோது அன்னை மரியாள் புனித சாமிநாதருக்கு காட்சி தந்து முரண்பாட்டுக் கொள்கையினரை எதிர்கொள்ளும் கருவியாக ஜெபமாலையைக் கற்றுக்கொடுத்தார். அன்றிலிருந்து தனது வாழ்நாள் முழுவதும் புனித சாமிநாதர் ஜெபமாலையின் முக்கியத்துவத்தையும் வலிமையையும் பலனையும் லூயிஸ் நகர மக்களுக்கு உருக்கமுடன் எடுத்துக் கூறும் போது அவர்களும் ஏற்றுக் கொண்டு புனித வாழ்வு வாழ ஆவல் கொண்டனர். என் அன்பிற்குரிய விவிலிய வாசகர்களே எனது பணி வாழ்வில் ஜெபமாலைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவதால் இறைவனின் கருணையால் இதுவரை 4,45,000 இலட்ச ஜெபமாலைகள் இலவசமாகவும், 8,00,000 இலட்சம் ஜெபமாலை ஜெபிப்பது எப்படி? என்ற சிறு கையேடும், 35,00 பிரதிகள் அன்னை மரியாளைப் புகழ்வோம் என்ற நூலை இலவசமாகவும், சில சமயத்தில் நன்கொடையாகவும் கொடுத்து வருவது உங்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மை. எனவே அனுதினமும் ஜெபமாலை ஜெபித்து இறைவனையும், யேசுவையும், அன்னை மரியாளையும் மகிமைப்படுத்தி என்றும் மகிழ்வோடு வாழ வாழ்த்துகிறேன்.

இறை ஊழியன் அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ்**

**குறிப்பு:** 1) பதில்களை **10–11–2017** க்குள் அனுப்பி வைக்கவும். 2) ஆசிரியரின் இறுதித் தீர்ப்பே முடிவானது. 3) பதிலை அதிகாரம், வசனத்துடன், சரியான முகவரியுடன் எழுதவும். 4) குலுக்கல் முறை யில் முதல் **10** நபர்களுக்கு பரிசுகள் அனுப்பி வைக்கப்படும். 5) பதில்களை இன்லேண்ட் (உள்நாட்டு) கடிதத்தில் (அ) ஐந்து ரூபாய் ஸ்டாம்பு ஒட்டிய கவரில் மட்டுமே எழுதி ❖ குறியிட்ட முகவரிக்கு அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன். 6) அல்லது e-mail: soosaimariarajendran@ gmail.com என்ற முகவரிக்கும் அனுப்பலாம்.

### பாரூக் முதல் 1 மக்கபேயர் வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | 9 |
| | | 2 | | | | | 11 | | |
| | 20 | | | 12 | | | 5 | | |
| | 17 | | 3 | | 8 | | | | |
| 6 | | | | | | | | 14 | |
| | | | | | 4 | | | | |
| | | | | | | 16 | | | |
| | 18 | | | | | | | | 10 |
| 15 | | | | 13 | | | | 22 | |
| 7 | | | | | | 19 | 21 | | |

### இடமிருந்து வலம்:

1.முழுமுதற்............ பற்றுறுதி கொள்ளுமாறு இஸ்ரயேலரைத் தூண்டுகிறது.
2.அண்டை நாட்டார் அனைவரும்............அவர்களைச் சிதறடித்தார்.
4. ...........எல்லாரையும் வாளுக்கு இரையாக்கி.
6. அதன் நெறிகளைக்................
7. அப்போது மன்னன் கடுஞ்............. கொண்டான்.
8. கடவுளின் ...........திளைத்த வண்ணம்.
11. கயிறு இன்னும் அறுபடவில்லை என்றும் .............நகையாடுகிறாள்.
15. அக்காலத்தில்.......குடும்பத்தைச் சேர்ந்த குருவான
18. தன்.........அனைவரிடமும் அவரை அறிமுகம் செய்து வைத்து.
20. அதார் மாதம் பதின்மூன்றாம்...........கொண்டாட வேண்டும்.

### வலமிருந்து இடம்:

3. உம்................த் திறந்து பாரும்.
5.இஸ்ரயேலே............தரும் கட்டளைகளைக் கேள்.
9. எங்கு சென்று............கொள்ளலாம்.
14. அவனுக்கு அஞ்சிப் புறமுதுகுக் காட்டி............
16. குதிரை வீரர்கள் படையின் இருபக்கமும் ..........பட்டார்கள்.
19. படைப் ...............கள் செய்தான்.

### மேலிருந்து கீழ்:

1. நமக்குக் கொடுத்த...........படி நடக்கவுமில்லை.
4. கடல்களே............ஆண்டவர் வாழ்த்துங்கள்.
9. கடவுள் தம் மாட்சியின் ...........மகிழ்ச்சியோடும்.
10. ..............கொடுக்கவோ துன்பத்தில் உழல்வோரைக் காப்பாற்றவோ.
12. கடவுளின்...........வாளுடன் காத்துக் கொண்டிருக்கிறார்.
13. பழிச்சொல்லுக்கும்..............நிலைக்கும் உள்ளாக்கினார்.
14. படை................இலட்சம் காலாள்களையும் இருபதாயிரம் குதிரை வீரர்களையும்.
17. கருவூலத்தில் இருந்த நிதியெல்லாம் செலவழிந்து விடக் .......................

### கீழிருந்து மேல்:

4. கடுந்துயரில் உழலும்................ம் கலக்கமுறும்.
7. ..............அண்மை நாட்டவரே கேளுங்கள்.
10. மனிதர்................தோளில் சுமந்து செல்லக் காண்பீர்கள்.
13. கதவைத் திறந்ததும் மன்னர் மேசையைப்..............
19. கொள்ளைப் ........... களோடு தன் நாடு திரும்பினான்.
21. தங்கள் உயிரையே ................வைத்தார்கள்.
22. உதவி செய்யும் பொருட்டு அவரோடு சேர்ந்து ................

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி:**
❖ அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ், தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி** - 166 தூய மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம், தாராபுரம் – **638 656**, திருப்பூர் –Dt. செல்: **99423 11068**

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-165
**மே மாத (2017) போட்டியின் முடிவுகள்**

**விவிலிய பகுதி: தோபித்து, யூதித்து நூல்கள்.**
**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 10 பேர்.**

1. Sr. ஐசிந்த்-சென்னை, 2.டெய்சி அமல்ராஜ் - சென்னை, 3. S.சவரிமுத்து Rtd.M.T.- சாத்திப்பட்டு, 4.M.லீலாமேரி ஜோஸ்பீன்-வக்கம்பட்டி 5.Sr.சிறிய புஷ்பம்-மேல்நாரியப்பனூர், 6. X. அகஸ்டின் மாக்ஸ்-திருச்சி, 7. F. ஜெசிந்தா-கொடுங்கால், 8. S.G.ஜோசப் ராஜமாணிக்கம் - மதுரை, 9. D.சூசைமாணிக்கம்-இடையர்பாளையம், 10.S.ராணி Tr - சேலம் கேம்ப்.

**சரியான பதில்கள்:**

**இடமிருந்து வலம்**
1.சிந்தையில் தோபி.1:12
2.கொள்ள யூதித்து 12:16
5.உள்ளோம் யூதித்து 9:6
7.கதறினர் யூதித்து 7:19
8.யூதேயா யூதித்து 8:21
12.செய்தார்கள்தோபி 8:19
15.பெயர் தோபி 13:13
16.உள்ள தோபி 14:6
17.கொண்டான் யூதித்.1:12

**மேலிருந்து கீழ்**
1.சிதறடித்தீர் தோபி.3:4
2.கொள்ளாதே தோபி.4:17
3. தாக்கினார்யூதித்து 5:12
4. அழைத்து தோபி.6:13
5. உயர்குடி யூதி 2:2
10. கொள்ள தோபி 3:10
11. மகள் தோபி 7:12
13. பருகி தோபி 8:20
14. ஆண்டவர்தோபி. 10:13
21. நேரடியாகதோபி. 14:10

**வலமிருந்து இடம்**
1. சிந்தித்து தோபி.3:10
3. தாமதியாதீர் தோபி 5:8
6. பகுதிக்கு யூதித்.3:6
7. கவலை தோபி.6:18
9. நீராடி யூதித்.10:3
13. பணத்தை தோபி.12:3
19. மேல் யூதித் 14:1

**கீழிருந்து மேல்**
2. கொடுத்து தோபி.4:14
3. தாக்கி யூதித் 9:10
7. கண்ணீர் 11:13
18. மட்டுமே யூதித்.3:8
20. கையில் யூதித் 9:2

**பாராட்டும், இறை ஆசீரும் பெறுபவர்கள்:** Sr. ஐசிந்த், டெய்சி அமல்ராஜ், அலோசியஸ்–சென்னை, A. அருள்மேரி, I.லீமா ஜெயசீலன்–செல்வபுரம், D.ரோஸ்மேரி–அழகப்பசமுத்திரம், J.அமல்ராஜ், Sr.மௌரீன்

தொடர்ச்சி 10–ஆம் பக்கம்..

# இயேசுவின் உவமைகள்

சகோ. அ. ஆரோக்கியதாஸ் - திண்டிவனம்.

**தூ**ய பவுல் அடிகளார் எபிரேயருக்கு எழுதிய திருமுகம், கடிதத்தில் கத்தோலிக்க கிறிஸ்துவர்களின் வேத நூலாக கருதப்படும் திருவிவிலியம் எனப்படும் பைபிள் என்பது எதைச் சொல்லுகிறது என்பதை குறிப்பிடுகிறார்.

எபிரேயர் 1:1,2 “பலமுறை பல வகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையிடம் பேசிய கடவுள் (2) இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்” என்று குறிப்பிடுகிறார். கடவுள் பேசி உள்ளார் என முதல் வாக்கியத்தில் கூறப்பட்டுள்ளது போல இந்த திருவிவிலியத்தில் குறிப்பிடும் கடவுள் பேசியுள்ளார். பேசினார் என்றால் அவர் உயிரோடு இருக்கிறார் என்று பொருள். உயிருள்ளவர்தான் பேச முடியும். எனவே, இந்த விவிலியத்தில் பேசியதாக கூறும் கடவுள் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் வாழ்வோரின் கடவுள். அவர் இறந்தோரின் கடவுள் அல்ல. இன்னமும், இன்றும், என்றும் எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

இந்த உயிருள்ள, வாழ்ந்து கொண்டிருக்கும் கடவுள் நம் மூதாதையரிடம், நம் முன்னார்களிடம் முற்காலத்தில் பேசியதாக கூறப்பட்டுள்ளது. ஒருமுறை அல்ல, பலமுறைகள். அவர் பேசியது ஒரே வகையிலும் இல்லை, பல வகைகளில் பல வழிகளில் பேசியுள்ளார். உ.ம்: எரியும் புதரில் மோயீசனிடம், தென்றல் காற்றில் எலியாவிடம், இப்படி இறைவன் அழைக்கும் குரலை அவர்கள் பலமுறை பல வகைகளில் கேட்டார்கள். இறைவன் நேரிடையாக மக்களிடம் பேசியதாக இல்லை. இறைவாக்கினர்கள் வழியாகத்தான் நம் முன்னோர்களிடம் பேசினார். இறைவாக்கினர்கள் மோசே, எசாயா, எரேமியா, எலியா, எலிசயா, எசேக்கியேல் etc., இறைவாக்கினர்களிடம் எப்படி பேசினார். என்பது தெரியாது. ஆனால் அவர் மக்களிடம் “ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்” என்று ஆரம்பித்து சில கருத்துக்களை, நல்ல உபதேசங்களை, ஆன்மாவின் தூய்மை வாழ்விற்கான வழிமுறைகளை கூறுகின்றார்கள்.

இப்படி இறைவாக்கினர் வழியாக தந்தை கடவுள் பேசியது என்ன என்பதை தெரிந்து கொள்ள திருவிவிலியத்தின் “பழைய ஏற்பாடு” என்ற பகுதியில் நாம் தெரிந்து கொள்கிறோம். பாவத்தால் பாவநிலையில் இறைவனின் அன்பை புறக்கணித்து வாழ்ந்த மனித இனத்தை மீட்க ஒரு மீட்பவரை அனுப்புவதாக வாக்களித்த இறைவன், அந்த மீட்பரின் வருகைக்காக, ஆயத்தப்படுத்த ஓர் இனத்தைத் தேர்ந்தெடுக்கிறார். பழைய ஏற்பாடு புத்தகத்தில் 12வது அதிகாரத்தில் அபிரகாமின் அழைப்பு என்பதிலிருந்து அந்த தேர்ந்தெடுக்கப்பட்ட இனத்தின் வரலாறு தொடங்குகிறது. அபிரகாமின் மகன் ஈசாக்கு, அவர் மகன் யாக்கோபு-பின் யாக்கோபின் 12 பிள்ளைகள் மூலம் இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட இனத்திற்கு யாக்கோபுக்கு இஸ்ரயேல் என்று இறைவனே பெயரிட்டு இந்த இனம் “இஸ்ரயேல்” என அழைக்கப்பட்டது. இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட இனத்தை தன் மீட்பின் திட்டத்திற்காக இறைவன் பல இறைவாக்கினர் வழியாக இறைமகன் வருகைக்காக தயாரிக்கிறார்.

எபிரேயர் 1:2 ல் இவ்விறுதி நாளில் தன் மகன் வழியாக நம்மிடம் இக்கால மக்களிடம் இறைவன் பேசியுள்ளார். தன் மகன் என்று இறைவன் குறிப்பிடுவது இயேசு கிறிஸ்துவைதான். பிலிப்.2:6-7 இந்த இயேசு கடவுள் வடிவில் விளங்கியவர். கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாக கருதவில்லை. தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவம் ஏற்று மனிதருக்கு ஒப்பானார். உலக வரலாற்றை இருபெரும் கூறுகளாக கி.மு., கி.பி. என்று பிரித்த நிகழ்வு கிறிஸ்து இவ்வுலகில் பிறந்தது, அவர் பிறந்து வாழ்ந்து, சிலுவைச் சாவை ஏற்று மரித்து, ஆனால் 3ம் நாள் உயிர்த்தெழுந்து இன்று 2017 ஆண்டுகள். நாம் தற்போது ஒரு நிகழ்வு பற்றி வரலாற்றில் குறிப்பிடும் போது கி.மு., கி.பி. என்றே பயன்படுத்துகிறோம். இந்தியா கி.பி. 1947ல் சுதந்திரம் அடைந்தது. அலெச்சாந்தர் பேரரசர் கி.மு. 323 ல் இந்தியாவின் மீது படையெடுத்தான். இப்படிதான் வரலாற்று நிகழ்வுகள் குறிப்பிடப்படுகிறது.

தொடரும்.

9-ஆம் பக்கத் தொடர்ச்சி..

மேரி, S. ரோசாலிமேரி-வடலூர், Sr. செசீலி-திண்டுக்கல், S.சவரிமுத்து Rtd.M.T.-சாத்திப்பட்டு, R. உத்திரியமேரி Tr-வடக்குச் செய்யூர், ஞானம் சவரிராஜ், பெரியவர் சீலி, C. பவுலீன் சூசைநாதன்-மதுராந்தகம், சத்தியநாதன் ஜூலியட்-காரைக்கால், Sr. செலீன் இராயப்பன், Sr.லாரன்ஸ் செல்வநாதன்-திண்டிவனம், Sr. ஞானதீபம்-புலியகுளம், Sr. காசியான்மேரி -இடையர்பாளையம், Sr. மேரி பாஸ்கல், மேரி பல்தசார், பல்தசார் அந்தோணிசாமி - ஜெயங்கொண்டம், Sr. விரோணிக்கம்-செஞ்சி, S.G.ஜோசப் ராஜமாணிக்கம்-மதுரை, P.மரியசகாய செபஸ்டின்-போளூர், M.லீலாமேரி ஜோஸ்பின்பஞ்சம்பட்டி, Sr. மரி கபிரியேல்-கும்பகோணம், Sr. அமலோற்பவமேரி, Sr.நெரீனாமேரி, Sr. எப்போனாமேரி, S. மெல்கி-அரியாங்குப்பம், F. ஜெசிந்தா-கொடுங்கால், A. ஜோசப்ராஜன், பெரியநாயகம் ஸ்தனிஸ்-அணையேரி, A. அருமைராஜ்-காந்தி கிராமம், J.ஸ்டெல்லா வின்செண்ட்-துடியலூர், A. செல்வராயர் சாந்தா-தெற்குச் சாத்திப்பட்டு, S.ஹென்றிதாஸ் - வடக்குத்து, J.ரெபேக்காள் அன்ன பாக்கியம் -முத்தையாபுரம், L.கோலாஸ் அகஸ்டஸ் Rtd.HM.-ஜமீன் கூடலூர், ரெஜினாராபின்-வெலிங்டன், S. தனசீலி, A.மரியப்பன் Rtd. Tr-விரியூர், ஜோஸ்பீன் வர்க்கீஸ், B. மரிதெரெஸ்-ரெட்டியார்பாளையம், Sr. மேரி ஸ்டெல்லா-கும்பகோணம், மேரி லொயலா, திவ்யநாதன், ஞ. புஷ்பமேரி, பிலோமினா அகஸ்டஸ், லில்லி அருள்தாஸ்-கடலூர், Sr. சிறியபுஷ்பம்-மேல்நாரியப்பனூர், S. ஆரோக்கியமேரி-ஆலங்குடி, Sr. ஆரோன் மரியசூசை-கரையம்புதூர், Sr. எப்ராஸியாமேரி-சேலம், S. கமலம்-திருச்சி, R. அற்புதசாமி Rtd. Tr, D. ஜோஸ்பீன் நிர்மலா-சோமனூர், F. கிளாராமேரி, பிலிப் பீட்டர் ஜான் மலையப்பா-வன்னியர்பாளையம், வின்சென்ட்ராஜ், லாவண்யா-மறவன்குடியிருப்பு, R. மிக்கேல்மேரி RtdTr, I.இருதயமேரி - ராமநாதபுரம், S. பால்ராஜ்-மேட்டுப்பாளையம், Sr. மேரி யூக்கரிஸ்டா, L. டல்சி டிகுருஸ்-போத்தனூர், S. செல்வி எமல்டாமேரி, S.ராணி Tr-சேலம் கேம்ப், Sr. மரியபுஷ்பம்-புறத்தாக்குடி. Sr.ஜோவித்தா மேரி, Sr.ஜார்ஜியாமேரி-புதுப்பாளையம், S.L.மரியதாஸ், N.பெரியநாயக மேரி, நிர்மலா-நெய்வேலி, மதலை இருதயமேரி, A.மோட்சமேரி Rtd.Tr.-மேட்டூர் அணை, A. உபகாரசாமி, L.லிட்டில் ப்ளவர், A. மரிய கிறிஸ்துராஜ் Rtd.H.M.-விழுப்புரம், A. எட்வர்ட் மரிய ஜோஸ், A. ஆரோக்கியசாமி, A. கரோலீன்மேரி, ஷீலாவிக்டர், D. உபகாரமேரி, S. ஆனி சுசான்சாந்தி, A.ஹெலன் சாராள்-புதுவை, S.B. தெரசா ரீத்தா பெஞ்சமின், K.L. இஸபெல்லா லூர்துராஜன், Y.A. லில்லி, N.P.ஆரோக்கியமேரி பீட்டர்-C.நம்மியந்தல். பிலோமினா சத்தியநாதன், J.ராஜபாக்கியம், N.ஜோசப்பின் வசந்தி, N.S.பூர்ணிமா-தேனி. ரோஸ்லீன் சார்லஸ், கிரிஜா புரோஸ்பர், விவிலியான் இருதயராஜ்-பெரும்பண்ணையூர், J. ஆன்றனி சகாய செல்பின் இளங்கோ, P. மரியதங்கம், A. சுஜா மகேஷ், A. மலையப்பன், A. சகாய எல்ஸி, S. சேவியர் மணி, A. ஆனி பிரபா, N.சின்னராணி, A. அன்னம்மாள், V. புஷ்பராணி-அழகப்பபுரம், செல்வராயன் மரிசெலீன், S. ஆரோக்கியமரி, G. அந்தோணி, D. சகாயமரி, A. சுசீலாராஜ், P.டார்த்தி, M.லாரன்ஸ், A. ஸ்டெல்லாராணி Tr, R. ஹெலன்-நெல்லித்தோப்பு, I. ரோஸ் செபாஸ்டியன் நாதன்-மதுரை, J.நோயல் அருள்தாஸ், A. அருள்சவரிநாதன் -திருவாக்கவுண்டனூர், C. கஸ்பார் Rtd.H.M-இளையாங்கண்ணி, S. மேரி ரொசாலி-கணபதி, S. மோட்சம்-குயவர்பாளையம், A. ஜோசப்-பெங்களூர், P. எலிசபெத்பீட்டர்-மன்னார்குடி, Sr. சின்னராணி, Sr. செலீன்-அணிலாடகு, Sr. ப்ளோரட்மேரி, I.ஆரோக்கியசாமி-உளுந்தூர்பேட்டை, X. அகுஸ்தீன் மாக்ஸ்-திருச்சி, த.பா. மேபிள் ரெஜினா-அருவங்காடு, G. பால்-தூத்துக்குடி, A. அல்போன்சாமேரி Rtd. Tr, S. சந்தியாகு Rtd.H.M. -நாரணம்பாளையம், P.விஜயக்குமார் - பாக்குமுடையான்பட்டு, M.சின்னப்பன் -உழவர்கரை, A. யூஜீன் - தஞ்சாவூர், S. இருதய விஜிலா-திண்டுக்கல், A. ஜெசிந்தா அமல்ராஜ் Rtd.Tr தாராபுரம், I.R. எட்மெண்ட்-காளையார்கோவில், A. ஹெலன் வின்சென்ட்- அவிநாசி, பதில் எழுதி பெயர் தெரிவிக்காதவர்கள் **6** பேர்.

மே மாத பரிசு உதவி: Rev.Fr.S. மரியஜோசப், திருத்தல அதிபர், திரு இருதய ஆண்டவர் பசிலிக்கா, புதுவை.

## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சர்வவியாபி இதழில் விளம்பரம் கொடுக்க விரும்புவோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

2017-2018 சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். தவறினால் இதழ் நிறுத்தப்படும். - ஆசிரியர்.

தோற்றம் : 25.05.1977



மறைவு : 18.09.2017

# 21-ம் நாள் நினைவு அஞ்சலி

இரக்கம் மிகு இறைவா! “இச்சிறியோருள் அவர் என் சீடர் என்பதால் ஒரு கிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவர் கைமாறு பெறாமல் போகார்” என்ற உமது வாசனத்திற்கு ஏற்ப வாழ்ந்து உம் பாதம் வந்து சேர்ந்துள்ள

திரு. **பெர்டினான்ட் செயின்ட் இயூபர்ட்** அவர்களுக்கு முடிவில்லாத பேரின்பம் அளித்து உமது பரிசுத்த கூட்டத்தில் சேர்த்தருளும்.ஆமென்.

- ஒரு கர்.மங்.திரி.

**மகனை இழந்து பிரிவால் துயருறும்**
**இரவீந்திர வர்மா செயின்ட் இயூபர்ட்**
**மரி தெரேஸ் செயின்ட் இயூபர்ட்**
**மற்றும் தம்பி தங்கைகள், உறவினர்கள்.**

## பெர்டினான்ட் செயின்ட் இயூபர்ட்

**“உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்”**

**- யோவான்.11:25**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 8-10-2017 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணிக்கு நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்

---

**விண்ணக வாழ்வின்**
**16-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

பிறப்பு: 14-09-1947



இறப்பு: 04-12-2001

**தெய்வத்திரு S. டேவிட்,**
DOS Office Driver (Rtd)

**விண்ணக வாழ்வின்**
**9-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

பிறப்பு: 19-12-1949



இறப்பு: 08-10-2008

**தெய்வத்திரு S. அடைக்கலமேரி**
Rtd Tr, Sacred Heart School, Cuddalore.

வாழ்வின் ஊற்றாகிய இறைவா! எம்மோடு இருக்கும்போது உம்மை எமக்கு சுட்டிக்காட்டி நாளும் உம்மிடம் எம்மை வழிநடத்தி உம் சித்தத்திற்கு பணிந்திருக்க பயிற்றுவித்த எம் தாய் மற்றும் தந்தையின் ஆன்மா உம்மில் மகிழ்ந்திருக்க அருள்புரியும் – ஆமென்.

**இவர்களுக்காக 8-10-2017 ஞாயிறு காலை 7.15 மணிக்கு, கடலூர், தூய கார்மேல் அன்னை ஆலயத்தில் மரித்தோர் திருப்பலி நிறைவேற்றப்படும்.**

**இவர்களது பிரிவால் துயருறும்**

**மகன்: D. அந்தோணிதாஸ்** Tr., St.Joseph's Cuddalore.
**D. விமலா லூர்துமேரி** Tr.,

**மகள்கள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.**
**கடலூர்.**

---

**✦ பங்களாதேசில் ரொஹிங்கியா குழந்தைகளிடையே யுனிசெஃப்:** மியான்மாரிலிருந்து அண்மை நாட்களில் வெளியேறி, பங்களாதேசிற்குள் அடைக்கலம் தேடியுள்ள ரொஹிங்கியா குழந்தைகளுக்குத் தேவையான அவசரகால உதவிகளை வழங்கத் துவங்கியுள்ளது யுனிசெ.்.ப் அமைப்பு. ஐ.நா. வின் குழந்தைகள் அவசரகால நிதி அமைப்பான யுனிசெ.்.ப், கோப்பன்காஹனிலிருந்து 100 டன் அவசரகால உதவிப் பொருட்களை விமானம் வழியாகக் கொணர்ந்து வழங்கத் துவங்கியுள்ளது. மியான்மாரிலிருந்து அடைக்கலம் தேடி பங்களாதேஷிற்குள் புகுந்துள்ள 4 இலட்சத்து 29, 000 ரொஹிங்கியா மக்களுள், 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் சிறார்கள் என உரைக்கும் , யுனிசெ.்.ப் அமைப்பு, அனைவருக்கும் சுத்தமான குடிநீரை வழங்க வேண்டியது அத்தியா வசியத் தேவை என தெரிவிக்கிறது. அடுத்த மூன்று மாதங்களுக்கு ரொஹிங்கியா அகதிகளுக்கு உதவ 73 இலட்சம் டாலர்கள் தேவைப்படும் என, யுனிசெ.்.ப் அமைப்பு ஏற்கனவே அழைப்பு விடுத்துள்ளது. - வத்.வானொலி.

---

**நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே, முடிவில்லா ஒளி இவர்கள்மேல் ஒளிர்வதாக.**



**இயேசு சபை அ.பணி Jerry Martinson க்கு Golden Bell விருது:** கடந்த மே 31ம் தேதி காலமான இயேசு சபை அருள்பணியாளர் Jerry Martinson அவர்களுக்கு, Golden Bell விருது இஞ்ஞாயிறன்று வழங்கப்பட்டுள்ளது. 'Uncle Jerry' என அழைக்கப்படும் இயேசு சபை அருள் பணியாளர் Jerry Martinson அவர்கள், தொலைக்காட்சி உலகுக்குத் தன்னை அர்ப்பணித் திருந்ததைப் பாராட்டும் விதமாக, இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. தாய்பே நகரில், இஞ்ஞாயிறன்று நடைபெற்ற 52வது Golden Bell விருது வழங்கும் நிகழ்வில், தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பிரபலமான Louise Tsuei என்பவர் இவ்விருதை வழங்கிப் பேசுகையில், அருள் பணி ஜெரி அவர்கள், தாய்வானையும், அம்மக்களையும் அன்பு கூர்ந்து, அவர்களுக்காக தன் வாழ்வை அர்ப்பணித்திருந் தார் என்றார். - AsiaNews.

**தாய்வான் அரசுத் தலைவர் திருத்தந்தைக்கு அழைப்பு:** தாய்வான் அரசுத் தலைவர் Tsai Ing-wen அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை, தன் நாட்டிற்கு திருத்தூதுப் பயணம் மேற்கொள்ளுமாறு, கடந்த ஈராண்டு களில் நான்காவது முறையாக அழைப்பு விடுத்துள்ளார் என்று, UCA செய்தி கூறுகின்றது. திருப்பீட ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற அவைத் தலைவர் கர்தினால் பீட்டர் டர்க்சன் அவர்களை, தனது அலுவலகத்தில் சந்தித்த வேளை, மனிதாபிமான உதவிகள் மற்றும் பிற விவகாரங்கள் தொடர்பாக கலந்துரையாடியபின், திருத்தந்தை தாய்வானுக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தார், அரசுத் தலைவர் Tsai Ing-wen. அக்டோபர் ஒன்று இஞ்ஞாயிறு முதல், ஏழாம் தேதி வரை, தாய்வானின் Kaohsiung நகரில் நடைபெற்றுவரும், கடல் தொழிலாளருக்கு மறைப்பணி ஆற்றுவது குறித்த 24 வது உலக மாநாட்டில் கலந்து கொள்ளும் கர்தினால் டர்க்சன் அவர்கள், தாய்வான் அரசுத் தலைவரையும் சந்தித்து உரையாடினார். - UCAN.

**இந்திய-பாகிஸ்தான் எல்லையில் அமைதியை ஊக்குவிக்கும் மாணவர்கள்:** பாகிஸ்தான் எல்லையிலுள்ள இந்தியக் கிராமங்களில், அமைதியை ஊக்குவிப்பதற்கென, இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில், பத்து கத்தோலிக்கப் பள்ளிகள் இணைந்து, கழகங்களை அமைத்துள்ளன என, யூக்கா செய்தி கூறுகின்றது. ஜலந்தர் மறைமாவட்டம் தொடங்கியுள்ள, Maitri Abhiyan எனப்படும் அமைதி திட்டத் தில், ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ஐம்பது மாணவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். பாலியல் வன்முறை, போதைப் பொருள் பயன்பாடு, மூடநம்பிக்கை, வீட்டு வன்முறை, சமூக நல்லிணக்கமின்மை போன்ற சமூக விவகாரங்கள் தொடர் புடைய குறுநாடகங்கள், பாடல்கள் மற்றும் நடன நிகழ்வு களை, இம்மாணவர்கள் தயார் செய்கின்றனர். இத்திட்டம் பற்றி யூக்கா செய்தியிடம் பேசிய, ஜலந்தர் மறைமாவட்ட நவஜீவன் பிறரன்பு கழக நிர்வாகி அருள்பணி Sijith John அவர்கள், நான்கு ஆண்டுகள்வரை இத்திட்டத்தை, காரித்தாஸ் இந்தியா, நவஜீவன் மற்றும், பாகிஸ்தான் காரித்தாஸ் அமைப்புகள் நடத்தி வந்தன என்று தெரிவித்தார். - UCAN.

**அருள்பணி டாம் விடுதலைக்கு நன்றி கூறும் நாள் அக்டோபர் 2:** ஏமனில் இஸ்லாம் தீவிரவாதிகளால் கடத்தப் பட்டிருந்த இந்திய சலேசிய சபை அருள்பணியாளர் டாம்



உழுன்னலில் அவர்கள் விடுதலை செய்யப் பட்டுள்ளதற்கு, அக்டோபர் இரண்டாம் தேதி, நன்றி கூறும் நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்று, அரேபியாவின் திருப்பீட பிரதிநிதி ஆயர் பால் ஹிண்டர் அவர்கள் அறிவித்தார். அருள்பணி டாம் அவர்களின் விடுதலைக்காக, திருப்பலிகளிலும், செபங்களிலும் கலந்துகொண்டு செபித்த விசுவாசிகள், அவர் விடுதலையடைந்திருப்பதற்கு நன்றி கூறவும் ஒரு நாளை அர்ப்பணிக்க வேண்டும் என்று, ஆயர் ஹிண்டர் அவர்கள் தெரிவித்தார். அருள்பணி டாம் அவர்கள், எதிர்பாராத நேரத்தில் செப்டம்பர் 12 ம் தேதி விடுதலை செய்யப்பட்டார் எனவும், அதற்கு நன்றி கூறும் நாளாக, காவல் தூதர்கள் விழாவான அக்டோபர் 2ம் தேதியை குறித்திருப்பதாகவும், ஆயர் ஹிண்டர் அவர்கள், ஆசியச் செய்தியிடம் கூறினார். - AsiaNews.

**உலக முதியவர் தினம் அக்டோபர் 1:** "வருங்காலத்தில் நுழைவது சமுதாயத்தில் வயது முதிர்ந்தவர்களின் திறமை கள், அவர்களின் பங்கு மற்றும் ஈடுபாடு" என்ற தலைப்பில், அக்டோபர் 1, இஞ்ஞாயிறன்று, உலக முதியோர் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. வயது முதிர்ந்தவர்கள், தங்களின் குடும்பங்கள், குழுக்கள் மற்றும் சமூகங்களுக்கு வழங்கியுள்ளவை குறித்து சிந்திப்பதற்கு, இந்த உலக நாள் அழைப்பு விடுக்கின்றது. உலகில் 2015ம் ஆண்டுக்கும், 2030ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், வயது முதிர்ந் தவர்களின் எண்ணிக்கை 56 விழுக்காடு அதிகரிக்கும், அதாவது, 90 கோடியே 10 இலட்சத்திலிருந்து, 140 கோடிக் கும் அதிகமாகும் என்று, ஐ.நா. கூறியுள்ளது. 2030ம் ஆண்டுக்குள், அறுபதும், அதற்கு மேற்பட்ட வயதையும் உடையவர்களின் எண்ணிக்கை, 15 வயதுக்கும், 24 வயதுக் கும் இடைப்பட்டவர்களின் எண்ணிக்கையை விஞ்சிவிடும் என்றும் ஐ.நா. கூறியுள்ளது. - UN

**இந்தியாவில் 50% பெண்களுக்கு, இதயம் தொடர்புடைய நோய்கள்:** இந்தியாவில் ஏறத்தாழ ஐம்பது விழுக்காட்டுப் பெண்கள், இதயம் தொடர்புடைய நோய்களால் பாதிக்கப்படும் அச்சுறுத்தலை எதிர்நோக்கு வதாக, ஒரு புள்ளி விவரம் எச்சரித்துள்ளது. செப்டம்பர் 29, இவ்வெள்ளியன்று, உலக இதய நாள் கடைப் பிடிக்கப்பட்டதையொட்டி, இவ்விவரங்களை வெளியிட்டுள்ள ஊடகங்கள், 2014ம் ஆண்டுக்கும், 2016ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 33 இலட்சத்துக்கும் மேற்பட்ட பெண்களிடம் நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையின்படி, இந்தியாவில் ஏறத்தாழ ஐம்பது விழுக்காட்டுப் பெண்களுக்கு, கெட்டகொழுப்பின் பாதிப்பு மிக அதிகமாக இருப்பதாகத் தெரியவந்துள்ளது. வட இந்தியாவில் வாழ்கின்ற பெண்களுள் 33.11 விழுக்காட்டினருக்கும், கிழக்கு இந்தியாவில் வாழ்கின்ற பெண்களுள் 35.67 விழுக்காட்டினருக்கும், இப்பாதிப்பு அதிகம் என்றும், தென் இந்தியாவில் வாழ்கின்ற பெண்களுள் 34.15 விழுக் காட்டினருக்கு, அதிகளவில் கெட்ட கொழுப்பின் பாதிப்பு இருக்கின்றது என்றும், அக்கணக்கெடுப்பு கூறுகின்றது. - IANS.

**திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி :** "காவல்தூதர் நம் நண்பர். இவரை நாம் பார்ப்பதில்லை. ஆனால், அவர் பேசுவதை நாம் கேட்கிறோம். விண்ணகம் நோக்கிய நம் மண்ணகப் பயணத்தில் அவர் நம்மோடு துணை வருகிறார்."

Printed and Published on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore,
by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.